# தாயகம்

24

மார்கழி 1992

விலை: 15/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகம்

புதிய ஜனநாயகம்
புதிய வாழ்வு
புதிய நாகரிகம்

7 - 12 - 1992 இதழ்: 24

## பொறுப்புணர்வு வேண்டும்

''நாம் ஒவ்வொருவரும் நமக்காக கடவுள் எல்லோருக்குமாக'' என்ற நடைமுறையே ஆட்சிசெய்பவர்களிலிருந்து அடிமட்ட மக்கள்வரை நின்று நிலவுகிறது. பொதுமக்களின் நலனைக் கருத்திற் கொள்ளும் பொறுப்புணர்வு இன்று குறைந்து வருகிறது.

இனப்பிரச்சனைக்கான தீர்வில் ஏற்படும் இழுபறிநிலை இதற்கு நல்ல உதாரணமாகும். ஒருவரது சுதந்திரத்தை ஒருவர் மதிப்பதற்குப் பதிலாக மற்றவரின் சுதந்திரத்தைப் பறிப்பதற்கே அவர்கள் முயல்கிறர்கள். ''முட்டாள் கல்லைத் தூக்குவது தன் காலிற் போட்டுக்கொள்ள'' என்பதுபோல சிங்கள ஆளும் வர்க்கம் தனது நலனைக் காக்க முன்வைத்த பேரினவாதம், இன்று முழுமக்களின் நலன்களுக்கும் தடைக் கல்லாய் அமைந்துள்ளது.

இத்தடைக் கல்லை அகற்றும் பொறுப்பை ஏற்க ஒவ்வொருவரும் தயங்குகின்றனர் சாதாரண சிங்கள மக்கள் இதற்குத் தடையாக உள்ளனர் என்பது சுத்த ஏமாற்று. இதனை வைத்துப் பிழைக்கும் நம்பிக்கை இவர்களிடம் இன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் போகவில்லை. அதிலும் ஆட்சி, அதிகாரம், படைபலம், மக்கள்பலம் கொண்ட ஆளுங்கட்சி பின்நிற்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டிய தொன்றாகும். இவர்களிடம் மக்கள் நலலுக்கான பொறுப்புணர்வை நாம் அதிகம் எதிர் பார்க்க முடியாது.

பேரினவாதத்தால் பாதிக்கப்படும் மக்களாகிய நாம் எவ்வளவு பொறுப்புடையவர்ககளாக இருக்கிறோம். பல்லாயிரககணக்கான மக்களைப்பலிகொண்டு தொடரும் இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதில் எமது பங்கும் பணியும் என்ன? யுத்தகால நெருக்கடிகளைத் தாங்கிக் கொள்வதில் எவ்வளவு பொறுப்புணர்வுடன் நாம் நடந்துகொள்கிறோம். ஒவ்வொருவரும் தத்தமது நெருக்கடிகளைத்தாமே தீர்த்துக்கொள்வது என்பது யுத்தகாலத்தில சாத்தியமாகுமா? இவைகளை தீர்ப்பதில் ஒருவருக்கொருவர் உதவும் மனப்பான்மையை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டாமா?

புத்தரின்மேல் பழியைப் போட்டு இன ஒழிப்பு யுத்தத்தை நடாத்தும் அரசைப்போல நாமும் யுத்தத்துக்கான பழியை ஆண்டவன்மேல் போட்டுவிட்டு கறுப்புச்சந்தை, பதுக்கல், கொள்ளைலாபம் இவற்றில் ஈடுபடுவதா? எமது எல்லைகளை குறுக்க அரசு எண்ணும் போது எமது வளவின் எல்லைகளை அரக்கிப் போட எண்ணும் அரக்க மனமும் இன்னும் எம்மைவிட்டு அகலவில்லை. எனவே போர்காலச் சூழலிலாவது பொறுப்புடன் வாழப் பழகுவோம். எமது கடமைகளைப் பொறுப்புடன் செய்வோம் நமக்காக என்ற நிலையை மாற்றி மற்றவர்களின் நலன்களிலும் அக்கறை கொள்வோம். ஒடுக்குமுறைக் கெதிராக இந்தமண்ணில் ஒன்றுபட்டு நிற்பதே எமது உரிமைகளைப் பெறுவதற்கு எமக்கு உள்ள ஒரே வழி.

ஆசிரியர் குழு



# சிறை: இரகசியம்

பெரியக்காவுக்கு வயது வந்தது
முட்டை நல்லெண்ணை முழுக்காடு சேலை
சடங்கு உறவு சுற்றம் விருந்தோம்பல்
சண்டை தகராறு வந்து முடிந்தன
விளையாட்டும் போனது
பள்ளிப் படிப்பும் மெல்ல ஒழிந்தது
வீடே அடைக்கலமாய்ச்
சிறை வீடாய் ஆனது

தரகர் சீதனம் அன்பளிப்பு நகை நட்டு
சாதகங்கள் சாதி
படிப்பு தொழில் பென்ஷன்
நம்பிக்கை ஏமாற்றம்
மீண்டும் தரகர்
விலைபேசல் பேரங்கள் நம்பிக்கை ஏமாற்றம்
பொய் புளுகு சோதிடம்
மீண்டும் பேச்சுப் பேரங்கள் பொய்கள்
வழக்கறிஞர் பதிவாளர் சாத்திரியார் ஐயர்

பெரியக்காவுக்குக் கலியாணம் வந்தது
முழுக்காடு சேலை தாலி புருஷன்
சடங்கு உறவு சுற்றம் விருந்தோம்பல்
சண்டை தகராறு அழுகை சமாதானம்
எங்கள் சிறைவாசம் ஒழிந்து
பெரியக்கா போனாள்

சின்னக்காவுக்கு வயது வந்தது
முட்டை நல்லெண்ணை சடங்கு சிறைவாசம்
தரகர் சீதனம் பதிவாளர் புருஷன்
சிறைவாசம் ஒழிந்து சின்னக்கா போனாள்

எனக்கு வயது வந்தது
முட்டை முழுக்காடு சேலை சிறைவாசம்
தரகர் அன்பளிப்பு சீதனம் தாலி
எங்கள் வீட்டுச் சிறைவாசம் ஒழிந்து
வேறோர் வீட்டுச் சிறைக்குள் அடைபட்டேன்

அம்மா அறியாளோ
அக்காமார் அறியாரோ
ஆரும் எனக்கு சொல்ல மறந்தாரோ

புவனம்

# திரு விளக்குப் பூசை

❀ என். சண்முகலிங்கன்

சின்னனோ பெரிசோ
இன்று
நீ தான் லட்சுமி

என்னுடைய அறிவுத்
தடவல் உன் துணையில் தான்

அன்று ஒரு பகலில்
உன் போல் ஒரு துணையுடன்
மனிதனைத் தேடும்
சோக்கிரட்டீஸ் கதையினை
இன்று
மின்சாரம் கண்ட
மனித நாகரிகத்தில்
மீளவும் நான் எழுதுவேன்

சூழ்ந்த நம் இருள் அகல
ஒளி வளர் விளக்கே!
எந்த
சூறாவளிக்கும் அஞ்சாத சுடரே!
உன்னைப் பூசை செய்வேன்
'திரு அரிக்கன் விளக்காய நமக!'



# வெடிப்பு

❀ குமுதன்

நகர்ப்புறப் பக்கமாக எங்கோ கேட்ட வெடியின் ஓசையும் அதிர்வும் எங்கும் பரந்து அவனது உடலிற் கூட சிறு அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. அந்தத் தோட்ட நிலத்தைக் கொத்திக் கொண்டு நின்ற சிவராமன் ஓங்கிய மண்வெட்டியை மண்ணிற் பதிக்காமல் அப்படியே நிறுத்தி மண்ணில் வைத்தபடி பெருமூச்சுடன் வானத்தைப் பார்த்தான்.

அந்த அதிர்வின் அளவை வைத்தே எத்தனை உயிர்களையும் உடமைகளையும் அது பலி கொண்டிருக்குமோ என்ற ஏக்கத்துடன் மனதில் அந்தக் காட்சிகள் விரிய அப்பாவிப்புக்களுக்காக ஒரு பெருமூச்சை மீண்டும் விட்டு விட்டு கொத்தத் தொடங்கினான் அவன்.

அந்தத் தோட்ட வெளிக்கு அருகிலுள்ள பிள்ளையார் கோவில் வீதி வழியாக அவனது காலை உணவுக்காக எதையோ பையில் சுமந்தபடி வருகிறாள் அவனது மனைவி சிவகாமி.

பசிக் களைப்புடன் இருந்த சிவராமன் உணவைக் கண்ட உற்சாகத்தில் வேகமாகக் கொத்துகிறான்.

''நிலம் சரியான கடுவலாக் கிடக்கு... சும்மா உடம்பை முறிக்காமை விட்டிட்டு வாங்கோ பாயிலை கிடந்தா மருந்து வாங்கவும் வழியில்லை.''

கோவில் வீதிக்கும் தோட்ட நிலத்துக்கும் எல்லையாக பருத்து வளர்ந்து கிளை விட்டுப் பரப்பி நின்ற அந்தப் பூவரச மரத்தின் கீழ் நின்றபடி சிவராமனை அழைக்கிறாள் அவள்.

மழை வெள்ளம் அரித்து வெளியே தெரியும் அரித்த வேர். வழமையாக அமரும் அந்த பூவரச மர வேரில் களைப்புடன் வந்தமர்கிறான் அவன்.

''சரி... அப்ப கொத்தாமல் விடுறன்... சாப்பாட்டுக்கு என்ன செய்யிறது.''

''பனைப் பக்கம் போய் விறகு கட்டி வித்தாலும் பறவாயில்லை''

அலுமினியக் கிண்ணத்தில் கஞ்சியை வார்த்தபடி அவள் கூறுகிறாள். ஆவலுடன் அதை

வாங்கிப் பருகிவிட்டு கடவாய்ப் புறத்தில் வழிந்த கஞ்சியை துடைக்கிறான் அவன்.

''அதுவும் ஏதோ சுகமான வேலையே!... உவளவு தூரம் போய் உந்தக் காத்துக்காலை இழுத்துக் கொண்டு வந்தால்த் தான் தெரியும் நெஞ்சு நோ''

''அப்ப உந்தக் கடுவல் மண்ணைக் கொத்திப் பிரட்டிப் போட்டு மண்ணெண்ணைக்கு என்ன செய்யப் போறியள்''

''இழுகொடியிலை தண்ணி அள்ளியார்தல் ஏதேனும் நடுறது தான்''

''சொல்லுக் கேக்க மாட்டியள் நல்லா முறிஞ்சு போட்டு வருத்தத்தைத் தேடுங்கோ. பிள்ளையள் பசியோடை போனது... நான் வாறன்''

கஞ்சிப் பாத்திரங்களை எடுத்துப் பைக்குள் வைத்தபடி செல்கிறாள் அவள்.

''இஞ்சாரும் உந்த ஒழுங்கை முகப்பிலை ஒரு பனம்பழம் எறிக்கப் போட்டனான் எடுத்துக் கொண்டுபோம் ... பிள்ளையளின்ரை உடுப்புத் தோய்க்கலாம்''

சிறிது தூரம் சென்றுவிட்ட அவனது மனைவிக்குச் சேட்பதற்காக எழுந்து நின்று சற்று உரத்துக் கூறுகிறான்.

மனைவியின் வார்த்தைகள் அவனது மன உறுதியைக் குலைக்காவிட்டாலும் அன்றைய வாழ்க்கைச் சூழலைப் பற்றிய எண்ணங்கள் அவனை அழுத்த மீண்டும் அந்த மர வேரில் அமர்கிறான்.

பத்து வருடங்களுக்கு முன்புதான் அந்தக் கிராமத்துக்கு மின்சாரம் வந்தது. மணம் முடித்த புதிதில் ஒரு நம்பிக்கையுடன் மனைவியின் நகைகள் சிலவற்றை விற்று மோட்டர் கிடங்கு வெட்டி தொட்டி கட்டி மின்னிணைப்புச் செய்திருந்தான். நிலம் வீணாகிறது என்பதற்காக ஆடுகால் மரங்களையும் துலாவையும் அகற்றி இருந்தான்.

அதற்குப் பின்னர் அரசாங்கம் அந்தப் பகுதியில் ஏற்படுத்தியிருந்த எரிபொருள் மின்சாரத் தடையினால் அவனது திட்டங்கள் எல்லாம் தவிடுபொடியாகின.

அதற்குமுன் ஆண்டு முழுவதும் காயும் பூவுமாக கத்தரி, வெண்டி, பூசணி, மிளகாய் என்று தோட்டப் பயிர்களும் வாழை, மரவள்ளியுமாக பச்சைபசேலென்று கோடை வெயிலிலும் ஈரலிப்பாக இருக்கும் அந்த தோட்ட வெளி, அருகில் உள்ள பிள்ளையார் கோயில் சென்றிற ஓடுகள், பலவர்ண உருவங்களைத் தாங்கிய கோபுரம், இவைகளுடன் இணைத்துப் பார்க்கும் போது எவ்வளவு அழகாக இருந்தது. தோட்டத்துப் பசளைகளையும் நீரையும் இழுத்து வீதி நீளத்திற்கு செழித்து வளர்ந்திருந்த பூவரச மரங்களில் ஊராரின் விறகுக்கும் கடுகாட்டுத் தேவைகளுக்கும் போக அந்த மரம் ஒன்றுதான் எஞ்சி நின்றது.

பிள்ளையார் கோவில் ஐயர் அர்ச்சனைக்கு வீபூதி சந்தனம் கொடுப்பதற்கு அந்த மரத்தின் இலையையே பிடுங்குவார். அப்படி வரும் பொழுது சிவராமனுடன் ஏற்படும் சிறிது நேர உரையாடல்களே இருவருக்கிடையிலும் ஓர் நெருக்கமான நட்பை வளர்த்திருந்தது. அந்த மரத்தின் இலைகளும் வரட்சியால் மஞ்சளடித்து வாடி உதிர ஆரம்பித்தது சிவராமனது மனதை உறுத்தியது.

நீரற்றுக் காய்ந்து கிடக்கும் அந்த நிலம், வெய்யில் பட்டு வெடித்து பிளந்து கிடக்கும் நீர் தொட்டி அந்த வெளியெங்கும் தீச்சுவாலை பட்டது போல் வாழைமரங்கள், கத்தரி, வெண்டி மிளகாய்ச் செடிகள் எல்லாம் வாடிக் கருகி இலையுதிர்த்துக் காய்ந்து கிடக்கும். வரட்சியின் கோரங்கள் அவனையும் மீறி ஒரு நம்பிக்கை வரட்சியை அவனுள் ஏற்படுத்த முனைந்த போதும் அந்த மண்ணோடு பிணைக்கப் பட்டு விட்ட வாழ்க்கை அவனுக்குள் உறுதியையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துகிறது.

மரத்தடியிலிருந்து எழுந்த சிவராமன் மரத்தடிக்கு அருகிலுள்ள வரம்பு வரை எப்படியும் கொத்தி முடிப்பது என்ற உறுதியுடன் எழுந்து செல்கிறான்.

வெயில் சூடு பிடிக்கிறது. கோடை வெயிலில் காய்ந்து இறுகி ஈரமற்றுப் போன அந்த மண்ணை மண்வெட்டியால் பிளந்து புரட்டுகிறான். வெய்யில் ஏற ஏற பூவரச மரத்தின் கீழ் தெரியும் வரம்பை இடையிடையே நிமிர்ந்து பார்த்தபடி மண்ணைப் பிளக்கிறான்.

தலையில் இருந்து கால்வரை உடலிலிருந்து வெளிவந்த புழுதியுடன் கலந்த வியர்வையால் அவன் உடுத்திருந்த சாரம் முற்றாக ஊறி நனைகிறது.

களைப்புற்று ஓயும் போது சோழகக் காற்றில் அள்ளுண்டு போகும் கருமுகிற் கூட்டங்களை அண்ணாந்து பார்க்கிறான். வாடைக் காற்றின் குளிரோடு வரும் இருள் கறுத்து மூடிய மாரி கால மேகத்தை கற்பனை செய்து பார்ப்பது போல அவனது மனம் குளிர்கிறது. மீண்டும் உற்சாகத்துடன் கொத்துகிறான். வரம்பை எட்டுவதற்கு இன்னும் சில அடிகள் தான்.

அவனது வீட்டுப் பக்கமிருந்து வரும் சாவீட்டின் ஓலம் அவனைத் திடுக்கிட வைக்கிறது. மனைவி சிவகாமி கோவில் வீதியால் ஓடி வருகிறாள்.

''வெள்ளையன் செத்துப் போனானாம்''





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடி வந்து கொண்டே கூறுகிறாள். சிவராமனும் ஓடிவந்து மரத்தடியில் மலைத்துப் போய் நிற்கிறான்.

"இதென்ன அநியாயம் காலமை சத்தம் கேட்டது அது தானாக்கும்"

"பொடி கொண்டெரேல்ல பின்னேரம் மாவீரர் மயானத்திலதான் விதைக்கிறதாம். கொட்டிலும் மேபேலைப் போல கிடக்குது. என்ன செய்யப் போகுதுகளோ..."

"பாவம் என்ன மாதிரி எங்களோடை பிளங்கினவன்."

துக்கம் தொண்டையை அடைத்தது. மண்வெட்டியில் கையை ஊன்றியபடி சிவராமன் வேரில் அமர்கிறான்.

"அப்ப நான் போறன் கெதியா வாங்கோ"

மனைவி அவசரமாகச் செல்கிறாள்.

அது அவன் பிறந்த கிராமமல்ல. சிவகாமியை மணம் முடித்ததால் உறவாகிப்போன கிராமம். ஏனைய கிராமங்களைப் போல் பிரிவினையும் பேதங்களும் நிறைந்ததுதான் அவனது வீட்டு வடக்கு வேலிக்கு அப்பால் பல குடும்பங்கள் குடிசைகளில் வாழ்ந்து வந்தாலும் ஏனைய கிராமத்தவரைப் போலவே அவனது வீட்டாரும் அவர்களுடன் நெருங்கிப் பழக விரும்புவதில்லை. கோழிகள், நாய்கள் பூனைகள் மட்டும் தாம் விரும்பியபடி வந்துபோகும்.

அவனது மகன் வண்டில் உருட்டி நடை பழகும் போதுதான் அதுவரை வேலித் துவாரங்களுக் கூடாக எட்டிப் பார்த்த வெள்ளையன் கறையான் அரித்த அந்த பொட்டுக் கூடாக புகுந்து தயங்கித் தயங்கி மெதுவாக வந்தான்.

உருண்டைத் தலையும். குறுகுறுப்பான கண்களும் சற்று உப்பிய உடலில் வீங்கி இறங்கிய வயிற்றுக்குக் கீழ் பொத்தான் இல்லாமல் இழுக்கச் செருகிய காற்சட்டை உரிந்து விடுமோ என்ற அச்சத்தில் தூக்கிப் பிடித்தபடி வந்தான்.

"வாரும் வெள்ளையர்... என்ன காற்சட்டை அவிழுதா?"

அவசர அவசரமாக காற்சட்டையை மீண்டும் அவிழ்த்து கோர்த்து இறுகக் கட்டிக்கொண்டு சிவராமனது வரவேற்பால் உற்சாகம் அடைந்து அவனது மகன் வண்டில் தள்ளிக்கொண்டு நின்ற இடத்தை நோக்கி நடந்தான்.

அரைநாண் கொடியுடன் அம்மணமாக மூன்று சில்லு வண்டியை போனபோக்கிலே தள்ளிக்கொண்டுபோய் திருப்ப முடியாமல் அவதிப்பட்ட அவனுக்கு முற்றத்தை நோக்கி வண்டியைத் திருப்புவதற்கு வெள்ளையன்





உதவுகிறான். அவனது முகத்தைத் திரும்பிப் பார்த்த அவனது மகன் திகைப்புடன் வண்டிலை கைவிட்டு நிலத்தில் குந்தியிருந்தபடி மீண்டும் அவனை உற்றுப் பார்க்கிறான்.

"என்ன வினோத்"

அவனது பார்வையில் கட்டுண்டு செல்லமாக வார்த்தைகளை விழுங்கி ஒரு தொன்னைக் குரலில் கேட்கிறான் வெள்ளையன்.

குழந்தையின் முகத்தில் ஒரு மலர்ச் சிரிப்பு மலர ஆவலுடன் அவனைத் தூக்கி வண்டிலைப் பிடிக்க வைத்து வெள்ளையனும் தள்ள சிவராமன் வீட்டுக்கும் அவனுக்கும் உள்ள உறவு மெல்ல வளர்ந்தது.

ஒரு நாட் காலை கிணற்றடியில் குளித்துவிட்டு வந்த சிவராமனின் மனைவி பரபரப்புடன் வந்தாள்.

"கிணத்தடியிலை வைச்ச மோதிரத்தைக் காணேல்லை ஆரேன் எடுத்தனிங்களே"

ஒருவரையும் விழித்துக் கூறாமல் பொதுவாகத் தான் எல்லோருக்கும் கேட்கும்படி உரத்துக் கேட்கிறாள்.

தோட்டச் செய்கையில் கழுத்திலும் கைகளிலும் இருந்த நகைகள் மெல்ல மறைய எஞ்சியிருந்த அந்த எழுத்து மோதிரம் அது. பெறுமதி குறைந்த தாயினும் அதன் மீது ஒரு மதிப்பை அவள் வைத்திருந்தாள்.

"நாங்கள் ஒருத்தரும் எடுக்கேல்லை"

"அப்ப எங்க போனது"

"வெள்ளையன் பெடியனும் வந்து நிண்டவன்"

மரவள்ளி நடுவதற்காக வீட்டுத் தாவாரத்தில் குந்தியிருந்து தடிப் புள்ளு வெட்டிக் கொண்டிருந்த சிவராமன், மாமியாரின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் பதைபதைத்து எழுகிறான்.

## சத்தியஜித் ராய்

சமூகத்திடம் கலைஞர்களுக்கு இருக்க வேண்டிய பொறுப்பு என்ன என்பதை. இந்தியக் கலைஞர்களுக்குக் காட்டியவர் சத்தியஜித் ராய். உண்மை உணர்வுடன் செயல்பட்டு ஏழ்மையை ஆராய்ந்து, அலசி எல்லோருக்கும் அதைப் பற்றிச் சொல்லி அதன் மனிதாபிமானமற்ற தன்மையைப் பற்றி சிந்திக்கச் செய்வது கலைஞர்களின் உரிமை மட்டுமல்ல; கடமையும் கூட என்றார் ராய்.

உத்பால் தத்

நன்றி: சலனம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சும்மா அவசரப்பட்டு கதைக்காம வடிவாத் தேடிப் பாருங்கோ''

சிவராமன் கொஞ்சம் இறுக்கமாகத் தான் சொன்னான்.

அவர்களும் அவனது உணர்வைப் புரிந்து கொண்டவர்கள் போல சிவராமனுடன் சேர்ந்து எல்லோரும் தேடுகின்றனர்.

''இஞ்சை சோப்போடை ஒட்டுப்பட்டுக் கிடக்கு''

மனைவி தான் எடுத்துக் கொண்டு வருகிறாள். மோதிரம் கிடைத்ததை விட அந்தச் சிறுவன் மீது வீண்பழி விழாத திருப்தி சிவராமனுக்கு ஏற்பட்டது.

''ஐயோ நானும் அறியாமல் சொல்லிப் போட்டன்''

தனது தவறுக்காக சிவராமனின் மாமியார் மனம் வருந்துகிறாள்.

அவன் சம்மந்தப் படாத நடந்து முடிந்த அந்த சம்பவத்தின் பின் வீட்டில் உள்ள எல்லோரும் அவன் மீது அன்பாக நடந்து கொள்கின்றனர்.

சிவராமன் தனது மகனுக்குத் தனக்குத் தெரிந்த எழுத்துக்களை சொல்லிக் கொடுக்கும் போதெல்லாம் அவனையும் இருத்தி சொல்ல்லிக் கொடுப்பான். ஆண்டு நாலுவரை அருகிலுள்ள பாடசாலைக்குச் சென்று வந்த அவன், கூலி உழைப்பில் வாழும் அவனது குடும்ப சூழலின் தாக்கத்தால் படிப்பை இடையில் நிறுத்திக் கொண்டான். அதற்காக சிவராமன் வருத்தப் பட்டான்.

அவனைக் காணும் பொழுதெல்லாம் சிவராமன் வீட்டிலாவது படிக்கும்படி தூண்டுவது வெள்ளையனுக்குத் தொல்லையாக இருந்தது. இதனால் சிவராமனைச் சந்திப்பதை படிப்படியாக அவன் குறைத்துக் கொண்டான்.

சிவராமனது மகன் அந்த நெருக்கடியான சூழலிலும் காலில் சப்பாத்தும் போடாமல் பாடசாலைக்குச் சென்றதற்காக அடி வாங்கிக் கொண்டு வந்து அழுத போதுதான் வெள்ளையனின் நிலையை அவன் புரிந்து கொண்டான்.

அன்று அர்ச்சனைக்கு இலை பிடுங்க வந்த ஐயருடன் கதைத்துக் கொண்டு நின்றதில் சிவராமனுக்கு இறைப்பு நேரம் பிந்தி விட்டது. அந்த யுத்த சூழலில் மக்கள் படும் துன்ப துயரங்களைப் பற்றித் தான் அவர் அதிகம் பேசினார். எவ்வளவு மனச் சுமைகளைத் தாங்கியபடி மக்கள் நடமாடுகிறார்கள் என்பது அவரது பேச்சில் தெரிந்தது.

அவர் சென்றவுடன் அவசர அவசரமாக பம்மைப் பூட்டி அவன் இறைக்கத் தொடங்கிய போது தான் வெள்ளையன் வந்தான். தூரத்தில் வரும்பொழுதே அவனது தோற்றத்தில் மாற்றம் தெரிந்தது.

''வாரும் வெள்ளையர்என்ன இந்தப் பக்கம் காணேல்லை''

''கம்மாலைக்கு வேலைக்குப் போறனான்''

நெருங்கி வந்த போது அவனது முகத்தை சிவராமன் நிமிர்ந்து அவதானித்தான். நெற்றியிலே திருநீற்றை அப்புப்படாமல் அழகாகப் பூசியிருந்தான், காதிலே மஞ்சள் நிற பொன்னொச்சிப்பூ. அந்தச் சிறுவனின் மனதிலும் ஏதோ சிறு மாற்றங்கள் ஏற்படுவதை அது வெளிக் காட்டியது.

''நீங்கள் ஏன் கோயிலுக்கு வாறேல்லை''

எதிர்பாராத அந்தக் கேள்வியால் சிவராமன் திகைப்படைகிறான். அவனது கேள்விக்குப் பதில் சொல்வதற்கு அவன் மிகவும் சிரமப் பட்டான்.

''நீர் இப்ப தானே கோயிலுக்குப் போறீர் ... நானும் உம்மைப் போல வயதில ஒழுங்காக கோயிலுக்குப் போனனான். இப்ப எங்கை விடிஞ்சாப் பொழுதுபட்டாத் தோட்டத்துக்கை கிடந்து மாய வேண்டிக் கிடக்கு''

தனது வாழ்வின் துயரங்களுக்கு ஏதோ ஒரு வகையில் நம்பிக்கையையும் ஆறுதலையும் பெற முயலும் அந்தச் சிறுவனுடன் அவன் அதிகம் பேச விரும்பவில்லை. அந்த பதில் அவனுக்கு முழுமையான திருப்தியை தரவில்லை என்பது அவனது முகத்தில் தெரிகிறது.

''கம்மாலையில எவ்வளவு சம்பளம் தாறவை''

''பத்து ரூபா இப்ப தானே சேந்தனான்''

''என்ர மண்வெட்டியையும் ஒருக்கா பாளம் போட வேணும்''

''கொண்டு வாங்கோவன் அவர் நல்ல வேலைகாறன். நான் தண்ணி கட்டட்டே''

''கட்ட ஆசையெண்டா கட்டும் வய்க்காலை உடைக்காம''

அன்று அவன் இறைப்பு முடிந்து போகும் போது மறந்து விடாமல் சிவராமனை கம்மாலைக்கு வரும்படி கூறிவிட்டுச் சென்றான்.

மறு நாள் மண்வெட்டியையும் சைக்கிளின் பின்னால் கட்டியபடி சிவராமன் கம்மாலைக்கு சென்றான்.

அந்தக் கிராமத்தின் சந்தை கூடும் இடத்துக்கு அருகிலுள்ள வளவில் சொப்புகள் எறிந்து செழித்து வளர்ந்த மரங்களுக்கு நடுவில் அமைந்துள்ள பழைய கொட்டகையில் தான் கம்மாலை அமைந்திருந்தது. நிறம் மாறிக் கறுத்துக் கிடக்கும் மண்ணும் வெளியோரங்களிலும் பனை மரங்களின் அடியிலும் சாத்தியபடி கிடக்கும் பழைய வண்டிற் சில்லுகள், கலப்பைகள், கார் சயிக்கிளின் உதிரிப் பாகங்களும் அந்த கம்மாலையின் பழமையை எடுத்துக் காட்டுவதாக இருந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டறை நடுவே ஓட்டுகள் போட்ட பழைய கன்வாஸ் துணியிலான துருத்தி. அதன் மேலிருந்து நீளும் தடியை மேலும் கீழும் அழுத்தி நெருப் பை மூட்டிக் கொண்டிருந்த கிழ வர் அவருக்கு அருகில் நின்றபடி ''வாங்கோ'' என்ற வெள்ளை யனின் குரலைக் கேட்டு சாம்பல் படிந்த மூக்குக் கண்ணாடி தெளிவற்றிருந்ததால் தலை யைத் தாழ்த்தி மூக்குக் கண் ணாடிக்கு மேலாகப் பார்க்கிறார்.

''என்ன பாளம் வைக்கவோ, உங்கம் பலகையில இரும். ரெண்டு தட்டில இது முடிஞ்சிடும்

துருத்தியை வேகமாக அவர் இயக்க ஊ ஊ என்ற சத்தத் துடன் மெல்லிய தீச்சுவாலை களை சீறியபடி எரிந்து பொங் கும் அந்தக் கனலுக்குள் கிடந்த பெரிய கத்தி செந் தணலாகச் சிவக்கிறது.

''வெள்ளை ரெண்டு தட்டுத் தட்டு''

பட்டறை இரும்பில் அதை தூக்கி வைத்தபடி கூறுகிறார் கிழவர்.

பாரமான அந்தச் சுத்தி யலை கனது சிறிய கரங்களால் சிரமத்துடன் தூக்கி ஓங்கி ஓங்கி யோடுகிறான் வெள்ளையன். ஒவ்வொரு அடிக்கும் அந்தச் சிறுவனின் உடலிலும் முகத்தி லும் இரத்தம் புடைக்க அவன் ஓங்கியடித்த காட்சி சிவராம னது நெஞ்சை அழுத்தியது.

அன்றிலிருந்து ஏழெட்டு மாதங்களுக்கு மேல் அவனை அவன் காணவில்லை. அவனது தாயார் இரண்டு மூன்று நாட் கள் இரவிலும் பகலிலும் தன் குடிசையிலிருந்து ஒப்பாரி வைத்து அழுதாள். இயக்கத் துக்கு போய்விட்டதாக ஊரில் பேசிக் கொண்டனர்.

தூரத்தில் அழுகை ஒலி தொடர்ந்து கேட்கிறது. கலங் கிய கண்களை துடைத்துவிட்டு சிவராமன் எழுந்தான். உச்சி வெய்யிலாகி விட்டது. ஏதோ நினைத்தவனாய் வரம்பை பார்த்துவிட்டு வெறி கொண்ட வன் போல மண்வெட்டியுடன் கால் பதிக்க முடியாத அளவுக்கு கொதித்துக் கொண்டிருந்த அந்த நிலத்தில் மீண்டும் இறங் குகிறான்.

அன்று கம்மாலையில் செந் தணலில் தோய்ந்து சிவந்த அந் தக் கத்தியை பாரமான சுத்தி யலால் ஓங்கி ஓங்கி அடித்த அந்த வெள்ளையனின் தோற்றம் அவன் மூன் விரிய காற்றைக் கிழித்தபடி மண்வெட்டியை ஓங்கி ஓங்கி வீசுகிறான். அந்த ஒலி அவன் காதுவரை கேட்டு அவனை மேலும் ஆவேசப் படுத் துகிறது. மரத்துப் போன அவ னது கைகளில் ஏற்பட்ட கொப் பளங்கள் வெடித்துக் கசிந்து மண்வெட்டியில் நீர் பிசுபிசுக்கி றது.

எஞ்சிய நிலத்தையும் கொத் திப் பிளந்துவிட்டு நிமிர்ந்த அவன் அழுகை ஒலிகள் உச்சம டைய மண்வெட்டியை தோளில் வைத்தபடி வேகமாக ஓடி நடக்கிறான்.

O





# கூத்து

❀ சேயோன்

மோதித் தலைகள் உடைத்துக் கெடுத்து,
முறுகி எழும்
பேதங்கள், வாதங்கள் மூட்டிப் பெருக்கும்
'பிளானுடனே'
தேர்தல் வழிச் சனநாயகம் ஒன்றே
சிறந்ததென
ஆதரவாக அமைத்துக் கொடுத்தவன்
அய்வ(ர்) ஜெனிங்ஸ்!

'ஒற்றைத் தனியாட்சி மத்தியிலே' என்னும்
ஓர் முறையைப்
பற்றிப் பிடித்து மகிழ்ந்தனர் அப்பெரும்
பான்மையினர்.
'முற்றும் சிறந்த மதம்' என்று புத்தனார்
முன்மொழிந்து
கற்பித்த மார்க்கத்தை மட்டும் வியந்தனர்—
காதலித்தே.

சிறி லங்கா என்பது சின்னக் குறுநலத்
தீவெனவும்
பிறர் இங்கு வாழ்தல் பிழை என்றும் எண்ணியே
பேசுகிற
வெறிகொண்டே ஆடிடும் வீண் நிலைக்கான
விதை விதைப்பு
நெறி இங்கே ஆரம்பம் ஆனதடா, தம்பி,
நேற்றிரவே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சிப் பெரும்பான்மை பெற்றவர் யாரும்
கடவுளர் போல்
உச்சத் தலைமை அதிகாரம் கொள்ளும்
உரிமை பெற்றார்.
எட்டி உதைக்கவும், மற்றத் தரப்பினை
ஏசிடவும்
கொச்சைப் படுத்தவும் ஆதிக்க ஆற்றல்கள்
கொண்டனரே.

தொகையால் மிகுந்த எவரே எனினும்
சுகம் பெறலாம்.
பகையாய் நினைந்து பிறபேரை மோதிப்
பழித்திடலாம்.
புகையாய் இலங்கையை ஊதி ஒதுக்கப்
புறப்படலாம்.
மிகவே தரலாம் — எதிரிகள் யாருக்கும் —
வேதனையே.

இவ்வகையான அரசியற் கூத்தின்
இருப்பிடமாய்த்
திவ்வியமான இத்தீவின் நிலைமை
திரும்பியதேன்?
பல்விதமாகிய பேதங்கள் தொற்றிப்
படர்ந்துவிட,
செவ்விய சீலம், ஒழுங்கு நலன்கள்
சிதறியதேன்?





# போதனைகள் எங்கே?

**சேரியூரான்**

கூர் முனை அம்பு பட்டு
புழுதியில் வீழ்ந்த அன்னம்
தானுறு துயர மெல்லாம்
நெஞ்சத்துள் வாங்கி; ஏங்கி,
நேயமுடன் நீதி ஆடி
நெறிமுறை நிலை நிறுத்தி
ஆசிய ஜோதி என்று
ஆகிய வள்ளல் நீர்.

புத்தரே அது ஒரு
புள்.

புள் அல்ல இங்கோர்
பரம்பரையே இன்று
பலி கொள்ளப்படுகிறது.

நீண்ட நெடு நாளாய் — எம்
நெஞ்சத்துள்,
அன்பு
அகிம்சை,
அடுத்தவரைத் துன்புறுத்தா
அற நெறியாம் போதனைகள்,
நிறைந்து, உணர்வில்
கலந்து
நெடும் பயணம் வந்தவைதாம்

இன்றெமக்கு
நினைக்க நேரமில்லை
அவற்றை.

எறிகணையும், ஹெலிச் சூடும்
இயந்திரப் பறவைகளின்
கனத்த குண்டு முட்டைகளும்
— எம்
தேசத்தை;
தேகத்தை
துளைத்துத் தொலைக்கின்றன.

நெடுந் தூரம் நாங்கள்
இழுத்து வரப்பட்டு விட்டோம்.

தென்புலத்தில்
புடம் போட்டு
பூசை செய்து
பூப் பெய்து
பூட்டி வைக்கும்
பொக்கிசங்கள் ஆயின — உம்
போதனைகள்.

## பனிப் போரின் முடிவு?

சமூக ஜனநாயகவாதிகளும் கொர்பச்சேவின் சிந்தனையாளர்களும் கருதுவது போல கெடுபிடி யுத்தத்தின் முடிவு புதிய சிந்தனை நிலவும் ஒரு யுகத்தையும், சமாதானமும் கூட்டுறவும் நிலவும் ஒரு யுகத்தையும் எடுத்து வரவில்லை, மாறாக வளர்ந்து வரும் இராணுவ மயமாக்கல் பெருகி வரும் தலையீடுகள் என்பவற்றைக் கொண்ட ஒரு கால கட்டம் எம் கண்ணெதிரில் தெரிகிறது. பாரிய மிகத் தீவிரமான வன்முறையுடன் கூடிய எதிர்கொள்ளல்கள் இடம் பெறக் கூடிய வழித்தடம் ஒன்றுக்குள் இப்பொழுது நாம் பிரவேசித்துக் கொண்டிருக்கிறோம்.

— ஜேம்ஸ் பெட்ராஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உழைப்பும் அமெரிக்கக் கனவும்

''சிறுவர் உழைப்பு அமெரிக்க வாழ்க்கையிலிருந்து பெருமளவிற்கு மறைந்து சென்றிருந்தது. ஆனால் கடந்த தசாப்த காலத்தில் அது மீண்டும் எழுச்சிகண்டு, பல்கிப் பெருகி வந்துள்ளதைக் காணமுடிகிறது, சமஷ்டி அரசின் புள்ளிவிபரத் தரவுகளின் பிரகாரம் 14 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட சுமார் 40 இலட்சம் சிறுபிள்ளைகள் இப்பொழுது சட்டபூர்வமாகத் தொழிலில் அமர்த்தப்பட்டுள்ளார்கள். அதேவேளையில் சுமார் 20 இலட்சம் சிறுவர்கள் சட்ட விரோதமான வேலைகளில் ஈடுபட்டு வருவதாக மதிப்பிடப் பட்டுள்ளது'' இவ்வாறு இன்டர்நாஷனல் ஹெரல்ட் டிரிபியூன் குறிப்பிட்டுள்ளது.

இதுவரை காலமும் சிறுவர்களை வேலையில் ஈடுபடுத்துவது என்பது மூன்றாவது மண்டல நாடுகளுக்கு மட்டுமே சொந்தமான பிரச்சனையொன்றாகக் கருதப்பட்டு வந்துள்ளது: வளர்ச்சிகண்ட முதலாளித்துவ உலகம் இந்த விஷயம் குறித்து அவ்வளவாக அலட்டிக்கொள்ள வேண்டிய தேவை இருக்கவில்லை. ஆனால் இன்று அமெரிக்கா போன்ற ஒரு வல்லமை மிக்க நாட்டில் சிறுபிள்ளைகளை வேலைகளில் அமர்த்தி, அவர்களைச் சுரண்டும் நடைமுறை வியாபித்து வருவதானது முதலாளித்துவ உலகின் கட்டமைப்பு ரீதியான நெருக்கடியின் வெளிப்பாடுகளை மிகவும் தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்டுவதாக உள்ளது. அமெரிக்காவின் கனவு சிதைந்து வருவதனையும் முதலாவது உலகின் சிலபாகங்கள் மூன்றாவது உலகமயமாகி வருவதனையும் இன்று நாம் காண்கிறோம். உலகின் தன்னிகரில்லாத தனியொரு வல்லரசாகக் கருதப்பட்ட நாட்டிலுங்கூட இந்த அவலம் தோன்றியுள்ளது. பெருமளவிற்குத் தம்பட்டமடிக்கப்பட்ட புதிய தாராளவாதத்தின் வெற்றி இறுதியில் ஒரு போலி வெற்றியாக இருக்க முடியும் என்ற சமிக்ஞையையும் இது காட்டுகிறது.

நன்றி: பொருளியல் நோக்கு, யூன் யூலை 1992

## பண்பாட்டின் பேரால் ... 2

# ஒப்புரவு

❀ முருகையன்

''வீண் கதை வேண்டாம்; விட்ட இடத்திலேயே தொடங்குவம்'' என்றாள் செந்திரு.

''அதுக்கு நான் சம்மதம். ஆனால், விட்ட இடம் எது? அது தான் நினைவில்லை. எனக்கு வர வர மறதி கூடிக்கொண்டு போகிறது. நீ சொல்லு பிள்ளை. விட்ட இடம் எது?'' ஞானியாரப்பு மெல்லச் சிரித்தார். அவர் இப்பொழுது முற்றத்து மாமர நிழலிலே ஒரு பாயை விரித்துவிட்டு அதில் இருக்கிறார். 'கைவல்லிய நவநீதத்தை' மூடி அப்புறமாக வைக்கிறார்.

''போன கடவை — அது தான், சனிக்கிழமை — பண்பாட்டைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தம். நீங்கள் சொல்லியிருந்தீர்கள் — பண்பாடு புதிய சொல்லாக்கம்; சால்பு பழைய சொல்; அது பண்பாட்டை விடக் கொஞ்சம் விரிவானது — என்று.''

''ஓம்.'' ஞானியாரப்பு தம் கண்களை மூடியபடி செந்திரு சொன்னவைகளை உற்றுக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

''சால்பு என்ற மேலமைப்பை — அதாவது மேற்கட்டுமானத்தைத் — தாங்கிக் கொண்டு ஐந்து தூண்கள் இருக்கின்றன. அவை அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை. இந்த ஐந்து தூண்களில் நடுவிலே இருக்கிறது ஒப்புரவு. அதைப்பற்றி நாங்கள் கொஞ்சம் ஊன்றிப் பரிசீலனை செய்ய வேண்டும்; இந்தளவும் அன்றைக்கு நீங்கள் சொன்னது. சரி, தானே?'' செந்திரு மூச்சு விட்டாள்.

''கெட்டிக்காரப் பிள்ளை. எல்லாம் சரி. ஆனால் மேற்கட்டுமானம் என்ற சொல்லை தான் கையாள - இல்லை.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஓம்: அது நான் 'அரசறிவியல்' என்று ஒரு புத்தகத்திலே வாசித்த சொல்லு. என்னை அறியாமலே வாயிலே வந்திட்டது.''

''அது தான் நல்லது. அறிவு என்றதைத் தனித்தனிப் பெட்டிகளுக்குள்ளே அடைத்து வைக்க முடியாது தான். அந்தச் சொல்லை இந்த இடத்திலே நீ கையாண்டது உன்னுடைய மன விரிவைத்தான் காட்டுகிறது. சரி. நாங்கள் ஒப்புரவு என்ற எண்ணக்கருவுக்கு வருவம். ஒப்புரவு என்றால் என்ன?''

செந்திரு பிடரியைச் சுரண்டுகிறாள். ''ஒப்புரவொழுகு என்று ஆத்திசூடியிலே படித்திருக்கிறம். ஆனால் அதுக்கு என்ன கருத்து? எனக்கு நினைவு இல்லை.''

''நினைவு எப்படி வரும்? ஒருத்தரும் சொல்லித் தந்திருக்க மாட்டார்கள்,''

''நீங்கள் சொல்லுங்கள்.''

''ஆத்திசூடியிலே மாத்திரமல்ல நாலடியாரிலும் இந்தச் சொல்லு வருகிறது.''

''நாலடியார் என்றால்?''

''அதுவும் ஒரு நீதி நூல். திருக்குறளுக்கு முன் பின்னாகத் தோன்றினது. சமண முனிவர்களாலே இயற்றப்பட்டது என்று சொல்லுகிறார்கள். நானூறு வெண்பாக்கள் அந்த நீதி நூலில் உண்டு. அதனால் அதை 'நாலடி நாநூறு' என்று சொல்லும் வழக்கமும் உண்டு.''

''நாலடியார் ஒப்புரவைப்பற்றி என்ன சொல்லுகிறது?''

''அதைப்பற்றிச் சொல்லுகிற ஒரு வெண்பா இது —

'வாழ் நாட்கு அலகா வயங்கொளி மண்டிலம்
வீழ் நாள் படாஅது எழுதலால் — வாழ் நாள்
உலவாமுன் ஒப்புரவு ஆற்றுமின்; யாரும்
நிலவார் நிலமிசை மேல்'

''இதன் பொருள்?''

ஞானியாரப்பு ஒரு புன்சிரிப்புடன் பேசுகிறார் — ''இதன் பொருள் பின்வருமாறு. மனிதர்களின் வாழ் நாளைக் கணக்கிடுவதற்கு ஆதாரமாய் உள்ளது கதிரவன் என்னும் ஒளி வட்டம். அந்த ஒளிவட்டம் இருக்கிற படியாலே தான் நாங்கள் நாட்களைக் கணக்கிடக் கூடியவர்களாய் இருக்கிறம். அந்த ஒளி வட்டமோ முறை தவறாமல் உதித்தும் மறைந்தும் கொண்டு இருக்கிறது. ஆனபடியால் ஒவ்வொரு மனிதருடைய வாழ் நாளுக்கும் ஒவ்வொரு முடிவு உண்டு. அந்த முடிவு வருகிறதுக்கு முதலே ஒப்புரவைச் செய்து



கொள்ளுங்கள்; அறத்தைச் செய்யுங்கள். குறிப்பிட்ட ஆயுள் நாளுக்கு மேல் யாரும் இந்த உலகத்திலே நிலைக்க மாட்டார்கள்.'

''இந்தப் பாட்டிலே வரும் ஒப்புரவுக்கு அறம் என்றது தான் கருத்தோ?''

''ஓம் அப்படித்தான் எடுக்க வேண்டும். உரையாசிரியர்களும் அப்படித்தான் எழுதியிருக்கிறார்கள். ஆனால்......''

செந்திரு நிமிர்ந்து உட்காருகிறாள்.

ஞானியாரப்பு தொடருகிறார் — ''வள்ளுவர் கருத்துச் சற்றே வேறு விதமாக அமைகிறது. அறம் என்றதற்கே வள்ளுவர் வகுத்த வரையறை சற்று விரிவானது. 'அறம்' என்றதைச் சுருக்கமாக எளிமைப்படுத்திச் சொல்ல முற்பட்டவர்கள் 'ஈதல் அறம்' என்று விளங்கப்படுத்திவிட்டு நின்று விடுகிறார்கள். ஆனால் உண்மையில் ஈதலும் அறமும் ஒரே கருத்துடைய சொற்கள் அல்ல. ஈதல் என்றால், கொடுத்தல் ஆகும். அதாவது வறியவர்களின் கதியைக் கண்டு மனம் இரங்கிச் செல்வர்கள் தரும் பிச்சை — அந்தப் பிச்சையை இடுகின்ற செயல் — இது தான் ஈதல் அல்லது ஈகை. அறம் என்றதினுடைய முழுமையான கருத்துப் பரப்பையும் 'ஈதல்' என்ற சொல் அடக்காது.''

''அப்படியானால்?''

''அறத்தினுடைய ஒரு பிரயோகம் — ஒரு வெளிப்பாட்டு வடிவம் தான் ஈகை அல்லது கொடை. அறம் என்றது அந்த ஈகைக்கு முதலேதுவாய் உள்ள ஓர் அடிப்படைப் பண்பு.''

''அந்தப் பண்பு மனிதர்களிடத்திலே ஏன், எப்படித் தோன்றுகிறது?''

''அன்றைக்கு ஒரு நாள் நீ குறிப்பிட்டாயே — வல்லது வெல்லும் என்றொரு கோட்பாட்டைப் பற்றி! அந்த உயிரியற் கோட்பாடு விலங்கு வாழ் நிலைக்கு உரியது. அந்த நிலையை விட்டு மேம்பாடு பெறும் போது — ஊரும் உலகமும் என்று மனிதர்கள் கூடி வாழ முற்படும்பொழுது — புதிய ஏற்பாடுகள், புதிய நெறி முறைகள் தோன்றுகின்றன. அப்படித் தோன்றிய நெறிமுறைகளிலே நடு நாயகமாக உள்ளது தான் அறம். அறத்துக்குப் பல்வேறு பரிமாணங்கள் உண்டு. அறத்தை இருவகையாக வரையறுக்கலாம். இவை இவற்றைத் தவிர்த்துக் கொள்வது தான் அறம் என்று வரையறுப்பது ஒரு வகை. இது எதிர்மறை அணுகலின் பயனான வரையறுப்பு. இவை இவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வரையறுப்பது ஒரு வகை. இது உடன்பாட்டு அணுகலின் பயனான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையறுப்பு. எதிர்மறை அணுகலின்போது தவிர்த்து விலக்கப்படுகின்றவற்றை இழுக்குகள் என்று சொல்லலாம்.''

''அறத்தைப் பொறுத்தவரை 'இழுக்குகள்' எவை?''

''வள்ளுவர் சுருக்கமான ஒரு விடையையும் அதன் விளக்கமான மற்றொரு விடையையும் தந்திருக்கிறார். ''மனமாசுகள்'' அறத்துக்கு இழுக்கானவை என்றார் அவர். பொறாமை, ஆசை, சீற்றம் ஆகியன அந்த மனமாசுகள்: இந்த மனமாசுகளின் உடனடிப் பேறாக வருவது வன்சொல். இவை நான்கையும் இழுக்குகள் என்று சொல்லி இவற்றை விலக்குவதே அறம் என்று வள்ளுவர் கற்பித்தார். இது வள்ளுவர் கற்பித்த முதலாம் பாடம்.''

''ஒரு விதத்திலே பார்த்தால், இந்த அணுகுமுறை எதிர்மறையானது தானே!'' செந்திரு கேட்கிறாள்.

''ஓமோம் விலக்குகளை மாத்திரம் எடுத்துக் கூறுவதால் இந்த அணுகுமுறை எதிர்மறையானது தான். ஆனால், வேறு தருணங்களில் மனிதர்களுக்கு அவசியமான நற்பண்புகளை உடன்பாட்டு முறையிலும் அணுகி வகுத்துக் காட்டியுள்ளார். அப்படி உடன்பாட்டு முறையிலே பேசும் பொழுது தான் அன்பு, நாண், ஒப்புரவு கண்ணோட்டம், வாய்மை என்பவற்றைச் 'சால்பு' என்றதைத் தாங்குகிற தூண்களாகக் காட்டுகிறார்.''

''இப்பொழுது ஒரு கணிதக் கருத்து எனக்கு நினைவுக்கு வருகிறது.''

''என்ன அது?'' என்கிறார் அப்பு.

''மறை, பூச்சியம், நேர் என்று மூன்று நிலைகளிலே நாம் எண்களை வரிசைப்படுத்துகிறோம். பூச்சியம் என்றது எதுவும் இல்லாத நிலை. பூச்சியத்தை விடக் குறைவானது 'மறை.' அதற்கு அடையாளம் சய (—). பூச்சியத்தை விடக் கூடுதலானது 'நேர்'. அதற்கு அடையாளம் சக (+). அறத்தைப் பொறுத்தவரையிலே இழுக்கு மறை; சால்பு நேர். அதாவது, தீமை மறை; நன்மை நேர். எப்படி என்னுடைய கண்டுபிடிப்பு? செந்திரு கேட்கிறாள்.

'மெத்தச் சரி' என்று தலை ஆட்டுகிறார், அப்பு.

''இதுகாறும் கூறியவற்றிலிருந்து, ஒப்புரவு என்கிறது கொடையை மாத்திரம் குறிக்கவில்லை என்று கண்டோம். அப்படியானால், அது யாது? செந்திரு இந்தக் கேள்வியைக் கேட்ட போது அவள் தன்னையே மீறிச் சிரித்து விடுகிறாள். ''இதுகாறும்'' என்ற



தொடர் தன்னுடைய வாயிலே வந்ததைத் தன் செவியினாலே கேட்ட பிறகு தான் அவ்வாறு சிரிக்கத் தோன்றியது. எல்லாம் பண்டிதர் பார்த்திபனின் வகுப்பில் இருந்து பழகின பழக்கம்! சிரிப்பை உடனடியாக அடக்கிக் கொண்டு மீண்டும் செந்திரு கேட்கிறாள். ''அப்படியானால் அது யாது?''

'வள்ளுவர் ''ஒப்புரவு'' என்று தனியாக ஓர் அதிகாரம் அமைத்து அதிலே பத்துக் குறள்களைப் பாடியிருக்கிறார். அவற்றைப் படிக்கும் போது பிறருக்கு உதவும் தன்மையைத்தான் பல குறள்களிலே வற்புறுத்தியிருக்கிறார் என்று தோன்றும். கைம்மாறு கருதாமல் மழையானது உலகுக்கு உதவுவதைப் போலவும், ஊர் நடுவில் உள்ள பொது நீர் நிலை போலவும், பயன் தரும் மரம் போலவும், மருந்து மூலிகை போலவும் நன்மை பயக்கும் பண்பு தான் 'ஒப்புரவு' என்று கொள்ள முடியும். ஒப்புரவினால் ஒருவனுக்குக் கேடு வரக்கூடுமானால், தன்னை விற்றுத் தானும் அந்தக் கேட்டை வாங்கிக் கொள்ளலாம் என்றும் சொல்லியுள்ளார். கொடை வள்ளல் ஒருவன் கட்டுமீறித் தன் பொருளைச் செலவு செய்யும்போது அவன் வறுமைப்பட நேரலாம் அல்லவா? அப்படி உண்டாகும் வறுமையைத் தான் 'கேடு' என்று வள்ளுவர் குறிப்பிட்டதாகக் கொள்ளலாம். இந்தத் தருணத்திலும் ''ஒப்புரவு'' கொடையை அல்லது ஈகையைத் தான் குறிக்கிறது என்று கருத இடமுண்டு.''

''அதெல்லாம் சரி அப்பு. ஒப்புரவு என்ற சொல்லு எப்படி உண்டாகியிருக்கக் கூடும்?''

''அதிலே இரண்டு கூறுகள் இருக்கின்றன என்று நினைக்கிறென். ஒன்று ஒப்பு; மற்றது உரவு. ஒப்பு என்றால் ஒத்த தன்மை; நிகரான தன்மை; சமனான தன்மை.''

''அதாவது ஏற்றத் தாழ்வு இல்லாத இயல்பு.''

''ஓம். மற்றது உரவு என்ற சொற் கூறு. உரவு என்றால் அறிவு; வலி; திட்பம் என்றெல்லாம் கருத்துண்டு.''

''அப்படியானால் 'ஒப்புரவு' என்றது ஒத்த தன்மையை அறிந்து தெளிவு பெற்ற திடமான நிலையைக் குறிக்கிறது என்று எடுக்கலாமா?''

''ஓம். அப்படித்தான் எடுக்க வேண்டும். ஏனென்றால், 'ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான்; மற்றையான் செத்தாருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப் படும்' என்று வள்ளுவரே பாடுகிறார். இந்தப்பாட்டிலே 'ஒப்புரவாளன்' என்ற சொல்லுக்குப் பதிலாக 'ஒத்தது அறிவான்' என்ற தொடரை அவர் கையாண்டிருக்கிறார்.''

''அப்படியானால் 'ஒப்புரவு' என்பது 'ஒத்ததை அறிவது' என்று ஆகும்.''

''மெத்தச் சரி. எவையோ சில பொருள்கள் ஒத்திருப்பதை அறிந்து தெளிவது தான் ஒப்புரவு. அந்தப் பொருள்கள் எவை?'' இந்தக் கேள்வியைத் தூக்கிச் செந்திருவின் முன் போட்டுவிட்டு ஞானியார் அப்பு சிறிதே நிறுத்துகிறார். இரண்டொரு கணம் அமைதி நிலவுகிறது.

பிறகு, செந்திரு பேசுகிறாள் — ''ஒப்புடைய அந்தப் பொருள்கள் மனிதர்கள். நான் சொல்கிறது சரி தானே!''

''ஓரளவு சரி. இந்தக் காலத்திலே மனித நேயம், மனிதநேயம் என்றும் மானிதம், மானுட வாதம், மனிதரியம் என்றும் எல்லாம் பேசுகிறார்கள் அல்லவா? அந்தக் கொள்கைப் படிவத்தின்படி பார்த்தால் நீ சொல்லுகிறதுசரி, பிள்ளை. ஆனால் கீழைத்தேயங்களில் நிலவி வந்த ஆன்ம நேயக் கோட்பாடுகள் தமது பார்வையை மனிதர் என்னும் வட்டத்துடன் நிறுத்திக் கொள்ளவில்லை. அதற்கு அப்பாலும் அந்த உயிரன்புக் கோட்பாடுகள் சென்றன. அந்த அன்பியல் மரபில் வந்த சுப்பிரமணிய பாரதியார் 'உயிர்கள் இடத்தில் அன்பு வேண்டும்' என்று பாடி இருக்கிறார்.''

''ஏன், அப்பு வள்ளுவர் கூட 'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' என்று தானே பாடினார்?''

''எல்லா உயிர்களின் மேலும் அன்பு செலுத்துவது உயர்ந்த குறிக்கோள். ஆனால் அதன் படி நடப்பது கடினமான காரியம். 'காக்கை குருவி எங்கள் ஜாதி ... கடலும் மலையும் எங்கள் கூட்டம்' என்று வாயாலே பாடுகிற பொழுது நல்லாய்த் தான் இருக்கிறது. ஆனால் உயிர்க்கொலையை முற்றாகத் தவிர்த்துக் கொள்ள எங்களால் முடிகிறதா? இல்லையே. ஒரு வேளைப் பசியைத் தீர்த்துக் கொள்வதற்குக் கூட நாங்கள் பிற உயிர்களை வருத்தித் தானே அந்த நமது உணவைப் பெற்றுக் கொள்ள வேண்டி இருக்கிறது!''

செந்திரு திடீர் என்று எதையோ நினைத்துக் கொள்கிறாள். மெல்ல எழுந்து தன் சயிக்கிளடிக்குப் போகிறாள். சயிக்கிளின்



கைப்பிடியில் மாட்டியிருந்த பிளாஸ்ற்றிக் கூடைக்குள்ளே கையை விடுகிறாள். அதற்குள் இருக்கும் கீரைப்பிடியொன்றை எடுத்து வந்து அப்புவின் அருகில் வைப்பதற்குக் குனிகிறாள்.

அப்பு சொல்கிறார் — ''கொண்டுபோய் அடுப்படிக்குள்ளே வை பிள்ளை தட்டுப்பெட்டியாலை மூடிவிடு''

செந்திரு அப்பு சொன்னபடியே செய்கிறாள். பிறகு சொல்லுகிறாள் — ''பார்த்தீர்களா, அப்பு, ஒப்புரவுக்கும் கீரைப்பிடிக்கும் கூடத் தொடர்புகள் உண்டு.''

''ஓம், பிள்ளை. உயிர்களிடத்திலே அன்பு வைக்கிற பொழுது நடைமுறையிலே எவ்வளவு சிக்கலை எதிர்நோக்க வேண்டி இருக்கிறது? கீரைப்பிடி இதைத்தானே சொல்லாமல் சொல்லுகிறது! எந்த எந்தப் பொருள்களை எந்த எந்த வேளைகளிலே ஒத்தனவாய் மதிக்க வேண்டும் என்று தீர்மானிக்கிறதிலேதான் எவ்வளவு சங்கடம்! 'புல்லும் புலவனும் நிகர்; கல்லும் கழுதையும் நிகர்' என்று மோனை முத்தமிழிலே — அடுக்குத் தொடரிலே — அழகாகச் சொல்லிப்போட்டுப் போகலாம். ஆனால், கீரையைக் கொல்லுகிறதுக்கும் கிழவனைக் கொல்லுகிறதுக்கும் இடையிலே தான் எவ்வளவு வித்தியாசம்! இவைகளை எல்லாம் பகுத்தறிந்து தகுதிகண்டு தன்னுடைய அறிவுப் புலத்திலே அமைத்துக் கொள்ளுகிறதுக்கு எவ்வளவு புத்தி வேண்டும்? எவ்வளவு நுண்மதி வேண்டும்? எவ்வளவு பண்பு வேண்டும்? எவ்வளவு பரிவு வேண்டும்? இவை எல்லாம் 'ஒப்புரவு' என்ற எண்ணக்கருவைக் கற்றுக்கொள்ளத் தேவையான முன் நிபந்தனைகள். ஆனபடியாலே தான், ஒப்புரவைப் பேரறிவு என்றும் பெருந்தகைமை என்றும் நயன் என்றும் சான்றாண்மையின் தூண் என்றும் சொல்லுகிறார்கள். அத்துடன் 'கடப்பாடு' என்றும் அது பேசப்படுகிறது. அதாவது, மனிதத் தன்மை உள்ள எவரும் ஒப்புரவின் முழுமெய்க் கருத்தை விளங்கிக் கொள்வதையும் அதைக் கடைப்பிடிப்பதையும் தமது கடமையாகக் கொள்ளவேண்டும் என்ற நிலைப்பாடும் தெளிவாகிறதல்லவா?''

''மிகவும் உயர்ந்த ஒரு குறிக்கோளாக அல்லவா ஒப்புரவு உள்ளது!''

''ஓமோம். ஆனபடியாலே தானே அது 'விழுமியம்' என்று போற்றப்படுகிறது!''

''அந்த விழுமியத்துக்கு என்ன அடிப்படை?''

''எல்லா உயிர்களிடமும் சென்று பரக்கும் எல்லை இல்லாத அன்புதான் அடிப்படை. அப்படிப்பட்ட அன்பு 'அருள்' என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "உனது இதயத்தைப் பிடுங்கி வெளியே கொண்டுவா"

சீனத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களுள் ஒருவரான பாஜின் தனது 88வது வயதிலும் மரணத்தின் இறுதி மூச்சு வரை எழுதவேண்டும் என்ற ஆவலுடன் எழுதுகிறார். '19ம் நூற்றாண்டின் மனச்சாட்சி' டால்ஸ்டாய் என்பது போல 'சீனப் புத்திஜீவிகளின் மனச்சாட்சி' என பாஜின் குறிப்பிடப்படுகின்றார். "உண்மையைச் சொல்" என்பதைக் குறிக்கோளாகக் கொண்ட இவருக்கு நான்கிங்கில் சிலை எழுப்பியவர்கள் அதன் கீழ் பொறிப்பதற்கு சில வாசகங்களைக் கேட்டபோது அவர் கொடுத்தது "உனது இதயத்தைப் பிடுங்கி வெளியே கொண்டுவா" என்பதாகும்.

சொல்லப்படும்." ஞானியார் அப்பு தமது கண்களை மூடிக் கொண்டு அமைதியாகிறார்.

"இன்றைக்கு நாங்கள் பேசினவை எல்லாம் மிகவும் உயர்ந்த இலட்சியங்கள்"

"ஓம் பிள்ளை"

"அல்லாமலும், அவை எல்லாம் பழைய காலத்து உலக நிலைமைகளிலே வகுக்கப்பட்டவை; பழந்தமிழ் நீதி நூல்களைத் தழுவி அமைந்தவை. இவை எல்லாவற்றையும் நாங்கள் எங்களுடைய நிகழ்காலத்து நிலைமைகளோடே பொருத்திப் பார்க்கவேண்டும். அப்படிப் பார்த்தாலொழிய, சரியான விளக்கம் எங்களுக்கு உண்டாகாது."

"மெய்தான். அது மட்டுமல்லாமல், மேற்குலகச் சிந்தனைகளோடேயும் நாங்கள் இந்தக் கருத்துக்களைப் பொருத்திப் பார்க்க வேண்டும். இன்றைக்கு இவ்வளவும் போதும் — என்ன, பிள்ளை!"

செந்திரு தலையை ஆட்டி விடை பெறுகிறாள். ஞானியார் அப்பு தம்முடைய பாயைச் சுருட்டுகிறார். ★



# பாரம்

சாலி

சுள்ளிகளை வைத்து தேத்தண்ணியை மூட்டிக் கொண்டிருந்த சரசு கொட்டில் குசினியின் வரிச்சு மட்டையூடாக றோட்டைப் பார்க்கிறாள். அடைப்பில்லாத முன் வேலி றோட்டில் போவோர் வருவோரைக் காட்டிக் கொண்டிருந்தது.

ஓரிரண்டு மாணவர்கள் புத்தகங்கள் கொப்பிகளுடன் செல்வதைக் கண்டுவிட்டு நேரம் எட்டுமணியாகி விட்டதென்று நினைத்துக் கொண்டாள். காலைச் சமையல் முடியும் நேரம் தான் அவள் காலைத் தேத்தண்ணிக்காக அடுப்படியில் குந்திக் கொண்டிருந்து நேற்றுப் பெய்த மழையில் நனைந்திருந்த சுள்ளிகளுடன் போராடினாள்.

அடிச்சுப் போட்டு ஓடி விளையாடும் தனது பிள்ளைகளின் கலகலப்புக் கேட்டபோது விளையாடேக்க தான் இதுகள் பசிய மறக்குதுகள் போல என்று நினைத்துக் கொண்டாள்.

மூன்று நான்கு தரம் வீட்டைச் சுற்றி ஓடியும் சின்னவனால் பெரியவனைப் பிடிக்க முடியவில்லை. ஏதோ யோசித்துக் கொண்டவன் எதிர்த் திசையில் ஓடிப் போய் குடிசையின் மூலைச் சுவரில் பதுங்கியிருந்தான். வேகமாக வந்த பெரியவனை லபக் கென்று பிடிக்க "ஆட்டம் ஆட்டம்" என்று கத்தினான் பெரியவன்.

"என்ன ஆட்டம். இல்ல இல்ல நான் வரேலப் போ"

"அ சரி சரி அவுட்டேஸ்"

என்று கூறிய பெரியவன் சின்னவனின் கையில் அடிச்சுப் போட்டு ஓட சின்னவன் மறுகையால் எட்டிப் பிடித்தான்.

"அ ... ஆட்டம் ஆட்டம்"

"என்ன நாத் தெரியா நான் வரேலப் போ"

"அ... அ நான் எனிச் சொல்ல மாட்டான்." என்றவன் திரும்பவும் எட்ட நின்று அடிச்சுப் போட்டு ஓடினான். ஓடிய பெரியவனை முன்பு மடக்கியது போல எதிர்த் திசையில் போய் ஒழிச்சிருந்தான். அது சரிவராது போகவே அவனை கலைச்சுக் கொண்டு ஓடினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைபட்டுத் திரிந்த இருவரையும் சரசு கூப்பிட்டாள். எரிந்து கொண்டிருந்த அடுப்புப் பக்கத்தில் உள்ள சாம்பலைக் கிளறியவள் ''இந்தாருங்கோ போய்ப் பல்லைத் தீட்டுங்கோ'' என்று சாம்பலிலிருந்து இரண்டு கரித்துண்டுகளை எடுத்துக் கொடுத்தாள்.

''அம்மா பசிக்குதம்மா'' சின்னவன் காலைத் தூக்கி நிலத்தில் உதைந்து கொண்டு சிணுங்கத் தொடங்கினான்.

''அ நீ பல்லத் தீட்டி முகம் கழுவிப் போட்டு வாணை நான் பிள்ளைக்குப் புட்டவிச்சுத் தாறன்.''

''அ ... சும்மா ... அம்மா நாப்பசிக்கு.''

''உண்மையாத்தான் பிள்ளைக்கு இஞ்சபார் மாக்குழைக்கிறத்துக்கெல்லே தண்ணி வைச்செரிக்கிறன். நீ போய் பல்லத் தீட்டிப்போட்டு ஓடியாணை.''

''அ ... ணாத்தெரியா ணாப் பசிக்கு.''

''அ ... அச்சாப்பிள்ளையெல்லே பிள்ளைக்குத்தானே செய்யப்போறன். ஓடியாணை.''

பெரியவன் முற்றத்தில் பல்லைத் தீட்டி முடிந்து கை வாளியை எடுக்கும் சத்தம் கேட்ட சரசு ''பெரியவன் சின்னவனையும் கூட்டிக்கொண்டுபோய் முகத்தைக் கழுவிவிடு.''

அவள் இப்பிடி எத்தனை தரம் பொய் சொல்லி சமாளிச்சிருக்கிறாள். ஒவ்வொருநாளும் ஏதோ ஒரு பொய்யைச் சொல்லி சமாளிச்சு அவர்கள் இருவரையும் பள்ளிக் கூடம் அனுப்பிவிடுவாள். ஆயினும் சின்னவன் அம்மா தன்னை பொய் சொல்லி ஏமாத்துகிறாள் என்பதை உணர்ந்து கொள்ளத் தொடங்கிவிட்டான். பெரியவன் அதைப் பொருட்படுத்துவதில்லை.

பாயில் படுத்திருந்த ஏழுமாதக் குழந்தை விழித்து அழத் தொடங்கியது. அதன் சத்தத்திற்கு, அருகில் படுத்திருந்த மூன்றுவயதுமகள் எழும்பியிருந்து கண்ணைக் கசக்கிக் கொண்டு ''அம்மா ..'' என்று சிணுங்கத் தொடங்கினாள்.

குழந்தையைத் தூக்கிய சரசு மடியில் வைத்து அதன் பசியைப் போக்கி அழுகையை நிப்பாட்டினாள். சிணுங்கிக் கொண்டிருந்த லச்சுமியை ஒரு கையால் அணைக்க, அந்தத் தாயின் அரவணைப்பில் தன் தம்பிப் பாப்பாவைப் பார்த்தபடியே தனது சிணுங்கலையும் மறந்து போனாள் லச்சுமி.

சரசுவின் கணவன் கணேஸ் விடிய வேளைக்கே எழும்பிப் போய்விடுவான். திரும்பி வரும் போது ஏதாவது கொண்டு வந்தால் தான், அந்த வீட்டில் எல்லாருக்கும் ஒரு வேளைச் சாப்பாடு கிடைக்கும். இல்லாவிடில்



இருப்பது பிள்ளைகளுக்கு பகிர்ந்து கொடுத்து அவர்கள் சாப்பிடுவதைப் பார்த்து தமது பசியை ஆற்றிக் கொள்வார்கள்.

கடற்றொழிலை நம்பி வாழ்ந்த குடும்பம், சண்டை தொடங்கினவுடன் வறுமை அவர்களைச் சூழ்ந்து கொண்டது. தோட்ட வேலை ஓரளவு தெரிந்தபடியால் ஆரம்பத்தில் தோட்டங்களில் கூலி வேலைக்குப் போனான். மண்ணெண்ணை விலை கூடியதால் சில காலமாக அதுவும் இல்லை. அதனால் சரசுவின் காதும் ஓட்டையாகிப் போய்விட்டது. மூக்கில் மாத்திரம் இன்னும் ஒன்று மின்னிக் கொண்டிருக்கிறது.

பொருளாதாரத் தடையினால் பொருளின் விலை அவர்களின் கற்பனைக்கு எட்டாமல் போயிற்று. சங்கக் கடையில் சும்மா இலவசமாக கொடுத்த நிவாரணம் அவர்கள் இப்ப முன்நூற்றுப் பதினைந்து ரூபாவைச் சுமந்து செல்ல வேண்டிய நிலையிலுள்ள நிவாரணமாப் போச்சுது.

சங்கக் கடையில் இண்டைக்குத்தான் ஐந்தும் அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களுக்கு நிவாரணம் கொடுக்கும் கடைசி, பிந்தினால் இல்லை. இது சங்கக் கடை மனேஜரின் சட்டம். இல்லாட்டி இரண்டு நாளாய்ப் பல்லைக் காட்டித் திரிஞ்சாத்தான், எல்லாருக்கும் கொடுத்து முடிஞ்ச பிறகு தருவான். நேரஞ் செல்லச் செல்ல சரசுவுக்கு நிவாரணத்தை இழப்பது போன்றிருந்தது. மனம் எங்கெயெல்லாமோ அலையத் தொடங்கிற்று. போனவரையும் காணவில்லையென சலித்துக் கொண்டாள். இதற்குத் தானே கண்ணுக்கு இருட்டோடயே எழும்பிப் போனவன் கணேஸ்.

எங்கெல்லாமோ அலைந்து திரிந்து கால் வலிக்கத் தொடங்கினாலும், எப்படியும் முயற்சி செய்து பார்ப்போம். நிவாரணம் வேண்டாட்டி இனி முழுப் பட்டினிதான். கடைசியாக இந்த வீடு என நினைத்துக் கொண்டு வந்த கணேஸ், அல்பிறற் வீட்டின் முன்னால் வந்து நின்றான்- வீட்டினையும் முற்றத்தில் படுத்திருக்கும் நாயையும் பார்க்கவாறு நின்ற கணேசின் உள்ளத்தில், பலவித கடவுள் பிரார்த்தனை வழிபாடு நடைபெற்றது.

தலையை நிமிர்த்தி கணேசைப் பார்த்த நாய் மீண்டும் தலையைச் சாய்த்து சுருண்டு படுத்துக் கொண்டது.

''என்ன கணேஸ் என்ன பார்க்கிறாய் வாவன் உள்ளுக்கு''.

விறாந்தையில் சாய்மனைக் கதிரையில் படுத்திருந்த அல்பிறற் குரல் கொடுத்தார்.

அவர்களுடைய தோட்டத்தில் தான் அவன் கூலிவேலை செய்தான். மண்ணெண்ணெய் விலை முன்னூறானதுடன் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன் தோட்டத்தைக் கைவிட அவனும் அங்கு போகாமல் விட்டு விட்டான். நாலைந்து மாதத்திற்குப் பிறகு இப்போதுதான் அவன் போகிறான். அப்பவே வேலைக்கு முந்தியே அவனின் குடும்ப நிலை அறிந்து சம்பளத்தைக் கொடுக்கும் அந்த நல்ல மனுசன் கைவிட மாட்டார். மீண்டும் மனதுள் ஒரு கடவுள் பிரார்த்தனையோடு அவருக்குப் பக்கத்தில் இருந்த குந்தொன்றில் போய் அமர்ந்து கொண்டான்.

''என்ன கணேஸ் கனகாலத்துப் பிறகு வந்திருக்கிறா எப்பிடி உன்ர பாடு'' தொடக்கத்திலேயே கேட்டுபோமோ விடுவோமோ என்ட போராட்டம் மனதில் பொலிபோல் பந்து மாதிரி அங்கும் [illegible]ம் மனது அலைந்து கொண்டிருந்தது.

''என்ன கணேஸ் என்ன யோசனை?'' இப்ப வேண்டாம் கடைசியாக் கேட்பம் மனம் ஓரிடத்தில் நின்றது.

''மழை பெய்து போட்டுது உழத் தொடங்கலியே'' கதையை மாத்தி நீட்டவிரும்பினான்.

''கொஞ்சம் பொறுத்துப் பார்ப்பம் என்றிருக்கிறன், கணேஸ். இனி விதைக்கிறதெண்டாலும் பசளை மருந்தெல்லே வேணும். எல்லாம் தட்டுப்பாடாக் கிடக்கு.''

வீட்டு அறையினிலிருந்து வெளியில் வந்த அல்பிறற்றின் மனைவி ''நான் சங்கக் கடைக்குப் பேட்டு வாறனப்பா'' என்று சொல்லியவாறு கையில் ஒரு கூடையுடன் வெளியேறினாள்.

அவள் போவதைப் பார்த்த அல்பிறற் ஏதோ யோசித்துக் கொண்டவர் போல கணேசின் பக்கம் திரும்பி ''கணேஸ் உன்ர ரண்டு பள்ளிக் கூடத்தில படிக்குதெல்லே அவைக்கு இந்தப் பள்ளிக்கூட முத்திர இப்ப கொடுக்கினம் நீ எடுக்கேலியே''

''அத வேண்டி என்ன செய்யிறது? இப்பதாற நிவாரணம் வேண்டக் காசக் கண்ணால பார்க்க முடியுதில்லை, அதுவும் இண்டைக்குத்தான் கடைசி. என்ன செய்யிற தெண்டு தெரியாமக் கிடக்கு.'' சொல்லி முடித்த கணேசின் மனம் அந்த வினாடியிலே ஆயிரம் தடவை கடவுளை வேண்டிக் கொண்டது. மனம் அவருடைய வாயிலிருந்து அடுத்து என்ன வரும் என்று ஆவலாய் அகலத் திறந்து கொண்டிருந்தது.

''என்ன கணேஸ் அந்த முத்திரை ஒன்றிற்கு இரண்டரைக் கிலோ சீனியும் ஒரு கலன் மாப்பைக்கற்றுமெல்லே கொடுக்கினம். நீ அத வேண்டி வித்தாலே கன காசு வரும். இப்ப சீனி தட்டுப்பாடான நேரம் சனம் எங்கயெண்டு வேண்டும். ஒரு பிள்ளையின் முத்திரையின்ர பெறுமதி தொண்ணூற்றி நாலு





ரூபா, அதின்ர பொருளின்ர பெறுமதி [illegible]னூற்றுத் தொண்ணூற்றைஞ்சு ரூபா மட்டில வரும்.''

நூற்றுத் தொண்ணூற்றியஞ்சு... இரண்டு நூற்றித் தொண்ணூற்றியஞ்சு...முன்னூற்றித் தொண்ணூறு ரூபா. முன்னூற்றித் தொண்ணூறில மூன்னூற்றிப் பதினைஞ்சு போனா மிச்சம்... மிச்சம்.

மனம் துள்ளிக் குதித்தது. அளவாக அல்லது அதற்கு குறைவாகக் கிடைத்தாலே காணும் என்று வந்தவனுக்கு நிவாரணம் வேண்டியும் காசு மிச்சம் வரப் போகுது என்று தெரிந்தவுடன் அங்கு நிற்க மனம் வரவில்லை. அப்படியே பாய்ந்து சென்று பள்ளிக்கூடத்தில் குதிக்க வேண்டும் போல இருந்தது.

''நான் போட்டு வாறனுங்க''

''நில் நில்! பேசி! கணேசுக்கு தேத்தண்ணி கொண்டுவா!''

ஏற்கனவே தயாரித்துக் கொண்டிருந்த மகள் அவர் சொல்லி முடிக்குமுன் கிளாசில் கொண்டு வந்தாள்.

அல்பிறற் வீட்டுக் கேற்றை விட்டு இறங்கிய கணேஸ், பொழுதை அண்ணாந்து பார்த்தான். பத்தர பதினொண்டுக்குள்ளதான் இருக்கும். மனம் தீர்மானித்தது. எவ்வளவு வேகமாக நடக்கமுடியுமோ அவ்வளவு வேகமாக நடந்தான். கால் இப்போது அவனுக்கு வலிக்கவில்லை. இன்று வீட்டில் எல்லோரும் சாப்பிடுவோம். காசும் கொஞ்சம் மிச்சம் வரும். மீண்டும் மீண்டும் மனதில் வேகமாய் வந்து மோதிச் செல்லும் இந்த நினைவுகளுடன் பள்ளிக் கூடத்தை அடைந்தான்.

பள்ளிக் கூட முன்வெளியில் சிறுவர்கள் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். கேற்றடியில் நின்ற ஆசிரியர் கணேசிற்கு தலைமையாசிரியர் இருக்கும் அறையைக் காட்டினார்.

''ஐயா !''

''என்ன வேணும்? சொல்லுங்கோ''

''என்ர பிள்ளை[illegible] ரண்டு படிக்குது அவேன்ர முத்திர ...''

''ஆர் முத்து நா[illegible] நாலாமாண்டு குண நாதன் ஐந்தாமாண்டு அவதானே''

''ஓம் ஐயா''

''இந்தாரும் கொண்டுபோம்'

இரண்டு கைகளாலும் வாங்கியவன் முகம் மலர்ச்சியால் மலர அவற்றைப் பார்த்தான். திடீரெண்டு அவனுடைய முகம் சுருங்கிக் கறுத்தது. இருந்த மகிழ்ச்சி வெள்ளம் அணையை உடைத்துக் கொண்டோடியது ஒரு துளி வெள்ளமும் இல்லாமல். நாவரண்டு போக ''ஐயா!'' என்றான்'

''என்ன வேணும் சொல்லுங்கோ'





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன ஐயா இதில வெட்டி குறையப் போட்டிருக்கு மற்றப் பிள்ளையளுக் கெல்லாம் கூட வாம்''

"எனக்குத் தெரியும் ஆரா வது வருவினமெண்டு. இந்தப் பிள்ளையள் ஆற்ற பிள்ளைய ளெண்டு பார்க்கத் தான் நான் இத எடுத்து வைச்சிருந்தனான். இல்லாவிடில் மற்றப் பிள்ளைய ளுக்கு கொடுத்த போதே உங்கட பிள்ளைய [illegible]கும் கொடுத்திருப் பன். இ[illegible] [illegible]பாருங்கோ''

ஒரு மேசையில் அடுக்கப்பட் டிருந்த தினவரவை எடுத்து கணேசின் முன் விரித்தார். "இருபத்திரண்டு நாள் பள்ளிக் கூடம் நடந்திருக்கு, உங்கட பிள் ளைய[illegible] [illegible]வர் எட்டு நாளும், ஒருவ[illegible] [illegible]து நாளும் வந்திருக் கினம். இப்படித்தான் ஒவ்வொரு மாதமும். பிள்ளையளை படிப் பிக்க விடுறதெண்டால் ஒழுங்கா விடுங்கோ! ஒழுங்கா வாற பிள் ளையளுக்குத் தான் முத்திரை யின்ர முழுத் தொகையும் கிடை க்கும். இல்லாட்டி வராத நாள கணக்குப் பார்த்து வெட்டிப் போட்டுத் தான் கொடுப்போம்''

"ஐயா ... பிள்ளையள் பசி யில தான் ஐயா பள்ளிக் கூடம் வருகுதில்லை. நீங்கள் இதில முழுத் தொகையையும் போட் டுத் தந்திய ளெண்டா அதுகள் வருமய்யா.''

"முதல் அதைப் போய் செய் யுங்கோ! இது மேலதிகாரியளின்ர ஓடர் இதில நான் ஒண்டும் செய்ய ஏலாது''

"அப்படிச் செல்லாதிங்க ஐயா கொஞ்சம் கருணை காட் டுங்க ஐயா''

"என்னால ஒண்டும் செய்ய ஏலாது நீங்க இதில நில்லாமல் போங்கோ''

"ஐயா ...''

"போ எண்டாப் போங் கோவன் பேந்தேன் இதில இருந்து சத்தம் போடுறியள்''

தலைமையாசிரியருக்கு கோ பம் வந்து விட்டதை உணர்ந்த கணேஸ், எனி எந்தக் கெஞ்ச லும் பலிக்காது என்பதை உண ர்ந்த போது அவனுக்கு உலகமே இருண்டு விட்டது போன்றிருந் தது. ஒரு நொடிப் பொழுதில் எல்லாமே போய்விட்டது. கை யில் உள்ள வெட்டப்பட்ட முத் திரையைப் பார்க்கிறான் இது எந்த மூலைக்கு காணும். மனம் அழுயோடு அறுந்து எரியும் நெ ருப்பில் விழுந்து சேர்ந்து எரி யத் தொடங்கியது. வர வர எங்குமே எரிவு. பார்க்கும் திசை யெல்லாம் எரியும் உடம்பினால் சுட்டுப் பொசுக்க வேணும் என்ற உணர்வு, ஒரே ஒரு பெரிய கட் டிடத்தைக் கொண்ட அந்த ஆரம்பப் பாடசாலையின் வகுப் பறைகளை எட்டிப் பார்க்கி றான். ஏமாற்றமடைந்த பார் வை பள்ளிக்கூட முன்வெளியில் விளையாடும் சிறுவர்களை மொ ய்க்க, அங்கும் ஏமாந்ததனால் மிக வேகமாக வீட்டிற்குப் பாய் கிறது. ஆம், அங்கு தான் நிற் பார்கள்: விளையாடுவார்கள் ... நரம்புகள் முறுகிக் கொண்டன. பிடிச்சு நாலஞ்சு விளாசு விளாச வேணும். எரியும் மனம் உந்தித் தள்ள நடை வேகமானது.

வழியில் சொறியர் பனை வெளியில் "அடி அடி, பிழை பிழை'' சத்தம் கேட்டுத் திரும் பிப் பார்த்தான். சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருக்கிறார் கள். கண்களால் தேடிப் பார்த் தான் அங்கும் இல்லை, பார் வையை பனை மரங்கள் உள்ள பக்கம் திருப்பினான். பனைமரங் களின் கீழ் அடர்ந்த நாயுண்ணிப் பத்தைகளில் இரண்டு சிறுவர்க ளின் தலை.

"டேய் ...'' நிலம் அதிரக் கத்தினான். விளையாடிய சிறு வர்கள் வெடிகுண்டு வெடித்தது போன்று அதிர்ச்சியில் அசையாது அப்படியே நின்று முழித்தார்கள். கை நிறைய நாயுண்ணிப் பழங் களுடன் வெளியே வந்த பெரிய வனும் சின்னவனும் பயத்தினால் அப்படியே நின்றார்கள்,

"வாங்கடா ... இஞ்ச'' ஒரு கர்ச்சனை. இதுகளப் பெத்த நேரம் ...

தாடைப் பற்கள் ஒண்டோ டொன்று முட்டி மோதின. இரு வரின் கையில் இருந்த நாயுண் ணிப் பழங்கள் நிலத்தில் சிதறு ண்டு பறந்தன.

மீண்டும் ஒரு கர்ச்சனை

"கெதியா வாங்கடா இஞ்ச'

தறித்த பனை மர அடிக் கொட்டின் மேலிருந்த புத்தகங் களை எடுத்துக் கொண்ட பெரி யவன் பின்னால் சின்னவன் தயங்கித் தயங்கி ...

வேலியிலிருந்த பூவரசம் கம் பொன்றை முறித்தான் கணேஸ். இலைகளை உருவிய போது இரு வருக்கும் கண்கள் கலங்கி விட் டன. கணேசின் கை பெரியவ னின் கையை இறுகப் பற்றிக் கொண்டது.

"உங்கள.. ''

"ஐயோ அப்பா ... ஐயோ அம்மா ... அடியாத தேங்கோ ...

"ஆ ஊ... அப்பா அடியா தேங்கோ.. ''

"அம்மா ஐயோ... அம்மா ஐயோ.. அப்பா அடியாதேங் கோ'' சின்னவன் கீச்சிட்டான்.

காலைத் தடவுகிறார்கள். முதுகைத் தடவுகிறார்கள்; குனி கிறார்கள்; குரல் அடிப் பாதா ளத்திலிருந்து இயன்ற மட்டும் பெரிதாக அலறுகிறது. கையால் தடுக்கிறார்கள்; தடுக்கும் கை களை தடி தாக்குகிறது. அடி அடி சுழரச் சுழர.

"ம் ..''

கணேஸ் களைத்துப் போய் விட்டான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சனியன்கள்''

தோலுரிந்து தொங்கும் பூவரசம் கம்பை ஆவேசத்தோடு தூர எறிந்தான்.

''ஆ ..''

நன்றாகவே களைச்சுப் போனான். ஒரிடத்தில் அப்படியே போய் இருந்தான். அவனுக்கு மூச்சு வாங்குகிறது. தூரத்தில் விளையாடிய சிறுவர்களைப் பார்க்கின்றான். அவர்கள் அசையாது தன்னையே பார்ப்பதை கவனித்தான். பக்கத்தில் சின்னவனும் பெரியவனும்.

''அ...அ...அம்மா...அ...அ... அம்மா... அ...அ... அம்மா...''

சின்னவனின் மூக்கிலும் நீர் வடிகிறது. இருவருக்கும் உடம்பு மேலும் கீழுமாக ஏறி ஏறி இறங்குகிறது.

கணேசிற்கு வேகமாக அடித்த சுவாசம் இப்போது படிப் படியாக பழைய நிலைக்குவந்து நின்றது. மீண்டும் சிறுவர்களையும் தேம்பித் தேம்பி அழும் தனது இரு பிள்ளைகளையும் பார்க்கிறான். மனதில் ஏதோ ஒரு உணர்வு. தூரத்தே ஹெலி ஒன்று துப்பாக்கிச் சன்ன மழை பொழியும் சத்தம் கேட்கிறது. மீண்டும் தனது பிள்ளைகளைப் பார்க்கிறான்.

'காலமை என்ன சாப்பிட்டிருப்பினம்? ஒண்டுமில்லை நேற்றும்... இல்லை.' அவர்களுக்கு கிட்ட. எழுந்து போனான். அவர்கள் பசியினால் நாயுண்ணிப் பழம் நிறைய திண்டிருக்கிறார். கடவாயில் தெரிகிறது. எரிந்த மனம் தணிந்து குளிர்ந்த நீரில் விழுவதுபோல பிள்ளைப் பாசம் மேலோங்க இருவரையும் கட்டிப் பிடித்து மாறி மாறிக் கொஞ்சுகிறான். நான் கூடுதலா அடிச்சு விட்டன் போல. மனம் ஒரு கணம் வருந்த அவர்கள் இருவரையும் தடவுகிறான்.

''அ... இனிமேல் இப்படி அடிக்க மாட்டன் அ... நீங்க அச்சாப் பிள்ளையளல்லே பள்ளிக்கூடம் போய் ஒழுங்காப் படிக்க வேணும். ஒழுங்காப் படிக்க வேணும்... என்ன...''

சொல்லியவனின் மனம் மீண்டும் எங்கோ செல்கிறது. விடை தெரியாத கேள்வி ஒன்று மனதை மெல்ல ஆக்கிரமிக்கிறது ம் என்ன செய்யலாம்? பட்டினியா ... ம் ... நிவாரணம் ... காசு...

முடிவில்லாத கேள்வி மனதைப் பாரமாக அழுத்த இரு பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு நீளமான றோட்டை வெறித்துப் பார்த்தபடியே நடந்தான்.

பின்னால் திரும்பிப் பார்த்த சின்னவன் ''அம்மா வாறா'' என்றான் வற்றிப்போன குரலில். தூரத்தில் தலையில் கடகத்துடன் சரசு வந்துகொண்டிருந்தாள்.





நிவாரணம் வேண்டிக் கொண்டு வருகிறாள் என்பதை கிட்ட வந்த போது உணர்ந்து கொண்டான். ஆச்சரியத்துடன் அவளின் முகத்தைப் பார்த்தவன் திடுக்குற்றுப் போனான். மூக்கு மின்னி இருந்த இடம் வெறுமையாகக் கிடந்தது.

இன்டைக்கு இது என்றால் நாளைக்கு... நாளைக்கு...

மனம் அழுதது.

''இந்தாங்கோப்பா இதக் கொண்டுவாங்கோ நான் களைச்சுப்போனன்''

மனைவி கடகத்தை அவனுடைய தலைக்கு மாற்றினாள். மனதில் விடைகாண முடியாத பாரம்; தலையில் விரைவில் முடியப்போகும் பாரம். அவன் சுமந்தபடியே நடக்கின்றான் அவர்களின் பின்னால்.

O

# முதற்பணி

சுமண்யன்

விரிந்த தூவெளி இருந்து
பிறந்த வேதக் கவிதைகள்
பதிந்த செவிகள் இன்றில்லை

நிலத்தில் பிறந்து வளியில்
கலந்த ஒலியலையை வானிருந்தபடி
பதியும் கருவி இங்கில்லை.

வானில் தொலைந்த ஒலியலை
பல்நாட் பின்னும் தேடிப்
பதியும் நிலை இன்றில்லை.

இவை பற்றி நினையாத
காலம் இடம் இதனை
மறவாது கருமம் வகுப்போம்.

தூவெளிப் பிரணவ மந்திரம்
இன்று பதிவாயின் நிதர்சன
வாழ்வை மாற்றப் பணிக்கும்.

மண்ணும் விண்ணும் ஏழுலகும்
துளாவி உண்மை காண
முதலில் மண்ணை மானுடம் வெல்க.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தணிகையன்

பேராசிரியர் க. கைலாசபதி அவர்களின் 10வது ஆண்டு நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது.

# கைலாசபதியின் சமூகப் பார்வை

பேராசிரியர் கைலாசபதி அவர்கள் இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலக்கிய வாழ்வில் புகுந்தார். இந்த நூற்றாண்டு மாபெரும் ருஷ்யப் புரட்சியின் விடுதலைக் கீதத்துடன் விடிந்தது. அதன் எழுச்சிப் பேரொலிகள் மானுடத் தளைகளை அறுப்பதில், மனிதகுல வரலாற்றில் என்றுமில்லாத ஒரு முன்பாய்ச்சலைத் தந்தது. ''ஆகா என்றெழுந்ததுபார் யுகப்புரட்சி'' என்று, பாரதி அன்று வியந்து நின்றான். ஆண்டாண்டு காலமாக அடிமைகளாய் வாழ்ந்த வர்க்கம் தம்மை ஆளும் உரிமையைப் பெற்றது. கொடுங்கோலன் சார் மட்டுமல்ல, உலகின் பல காலனித்துவ பாசிச அரசுகளும் சடசடவெனச் சரிந்தன. புதிய சீனம் கிழக்கில் உயிர்ப்புடன் எழுந்தது. கியூபா, கொரியா, வியட்னாம், கம்போடிய நாடுகள் விழித்தெழுந்தன.

தனது இறுதிநாள் வந்துவிடுமோ என்று அஞ்சிய அமெரிக்க ஏகாதிபத்தியம் முனைப்புடன் செயற்பட ஆரம்பித்தது. நிலப்பிரபுத்துவ அமைப்புக்களையும் துணைக்கழைத்து பல்லாயிரமாண்டு காலப் பழமைச் சிந்தனைகளின் பலத்தோடு புதிய அமைப்பை எதிர்க்க உறுதி கொண்டது. முதலாளித்துவமா? சோஷலிசமா? என்ற கேள்வி ஐம்பதுகளின் ஆரம்பங்களில் உலகெங்கும் எழுந்தது. இலங்கை போன்ற, உலகின் பின்தங்கிய நாடுகளில் மக்கள் நலன்



சார்ந்த புத்திஜீவிகள் சோஷலிசத்தை நோக்கிய சமூகப்பார்வையை தமதாக்கிக் கொண்டனர். தமிழர்கள் மத்தியில், மறைந்த கார்த்திகேசன் முதல் கைலாசபதி போன்ற புத்திஜீவிகள் சாதி, இன, மத, வர்க்க, பெண்விடுதலை உள்ளிட்ட சமூக விடுதலைக் கருத்தை ஏற்று தத்தமது நிலைகளிலிருந்து பணியாற்ற முன்வந்தனர்.

பழமைப் பிடிப்புக்குள் ஊறிக் கிடந்த எமது சமூகத்தில் படித்தவர்களில் பெரும்பாலானோர் கூட தாம் வாழ்ந்து படித்த சூழலையும் மறந்து தாமும் தம் வாழ்வும் என்று ஒதுங்கிக் கொண்டனர். அத்தகையதொரு சூழலில் மாக்சிசக் கருத்துக்களை ஏற்று அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கும் விமோசனத்துக்கும் தமது அறிவையும் ஆற்றலையும் தந்த இவர்களை நாம் மக்கள் நலன் சார்ந்த புத்திஜீவிகளுக்கு முன்னுதாரணமாகக் கொள்ள முடியும்.

''எமது தலைமுறையில் வியத்நாம் எவ்வாறு உலக மக்களது மனச்சாட்சியை உலுப்பி ஜனநாயகவாதிகளையும், தேசபக்தர்களையும், ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களையும் ஒருமுகப்படுத்தியதோ அதே போன்று முப்பதுகளில் சின்னஞ்சிறிய ஸ்பெயின் உலகின் நல்லோரை நாலா திசைகளிலிருந்தும் ஈர்த்தது'' என்று கூறிய கைலாசபதி அவர்களும் அதே போன்று சோஷலிசக் கருத்துக்களின்பால் அன்று ஈர்க்கப்பட்டார்.

பேராசிரியர் கைலசபதி அவர்கள் இலக்கிய விமர்சனத்துக்கூடாக இச் சமூக விஞ்ஞானப் பார்வையை தமிழ் இலக்கியப் பரப்பில் முன்வைத்தார். விமர்சன இலக்கியம் பற்றிக் குறிப்பிட்ட அவர் ''மாக்ஸியத்தைத் மேலும் ஆழமாகக் கற்பதனாலும், சமூக விஞ்ஞானத் துறைகளுக்கும் இலக்கியக் கல்விக்குமுள்ள தொடர்புகளைத் தெளிவுபடுத்துவதன் மூலமும், இவை யாவற்றுக்கும் மேலாக சமுதாய மாற்றத்துக்கு விமர்சன இலககியத்தையும் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துவதனாலுமே அதனை மேலும் கூர்மையாகவும், செழுமையாகவும் வளர்க்க முடியும். விமர்சனம் என்பது உலகை விபரிப்பது மாத்திரமன்று, அது உலகை மாற்றி அமைப்பதற்கு உழைக்கும் வர்க்கமும் அதன் நேச சக்திகளும் ஓயாது பயன்படுத்தும் அறிவாயுதமாகவும் இருத்தல் வேண்டும்'' என்றார்.

இத்தகைய விமர்சன முறையை முன்வைத்து இயங்கியல் நோக்குடன் பழந்தமிழ் இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரை ஆராய்ந்தறிந்து விமர்சித்தார். இதன் மூலம் சமூகநலன் சார்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு விமர்சன முறையைத் தமிழுக்கு அளித்தார். இலக்கண மொழி அறிவும், நயப்புணர்வு பெறுதலுமே தமிழைக் கற்றல் என்ற நிலையை மாற்றி பொருளியல் வரலாற்று அறிவுடன் சமூக உணர்வு மிக்கவர்களாகவும் தமிழைக் கற்பவர்கள் மாற்றமுற வழிவகுத்தார்.

வரலாறு என்பது சங்கிலித் தொடர்போல நீண்டு வளர்வது. ஒடுக்கு முறையும் போராட்டமும் என்ற இரு முரண்பாட்டு அம்சங்களின் இழையங்களால் பின்னலுற்று வளர்ந்து வருவது. நேற்றைய வாழ்வின் தொடர் இன்றாகவும் இன்றைய வாழ்வின் தொடர் நாளையாகவும் நீள்வது. இத்தகைய இயங்கியற் போக்கு அரசியல், பொருளாதார, கலை, கலாச்சார வாழ்வியல் அனைத்திலும் இயல்பாக உள்ளது. எனவே இத்தொடரில் ஒன்றை அறுத்து ஒன்றைப் பார்ப்பது அறிவியற் பார்வையாகாது.

அடிமை விலங்குகளை ஒடித்து ஒரு புதிய வாழ்வை ஆக்கவல்ல மக்கள் சக்தி எங்கும் தேங்கிக் கிடக்கிறது. தாம் படும் துன்ப துயரங்களின் காரணங்களை அறியாமல் அந்த மக்கள் தேம்பி அழும் நிலை தொடர்வதற்குக் காரணம் இன்றைய அரசியல் பொருளாதார நிலைகள் மட்டுமல்ல; நேற்றைய வாழ்வின் தொடராக வரும் மத கலாச்சார மரபு வழிச் சிந்தனைகளும் இன்றைய வாழ்வை நிர்ணயிக்கின்றன.

எனவே பழமையைப் போற்றி வழிபடுவது அல்லது புதுமையைப் போற்றி வழிபடுவது என்றிருந்த நிலையை மாற்றி தீதும் நன்றும் தெளிவுற அறிந்து நன்மையைப் பேணும் வழியினை கைலாசபதி அவர்கள் காட்டி நின்றார். புதியதை உருவாக்கப் புத்தூக்கம் தரும் பழந்தமிழ் இலக்கியச் செய்திகளை அவர் ஏற்கத் தவறவில்லை.

கைலாசபதி அவர்கள் ''மானுடம் வென்றதம்மா'' என்ற கம்பனின் கூற்றைக் குறிப்பிட்டு ''தாம் வாழ்ந்த காலத்துச் சமுதாய நிறுவனங்களும் நியதிகளும் குறைபாடுடையவை என்னும் நம்பிக்கையுணர்வின் உந்துதலினாலேயே இப்பெருங் கவிஞர்கள் மானுடன் கேடின்றி வாழத்தக்க கற்பனை உலகினைப் படைக்க முற்பட்டனர். காலத்துக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்த அவர்கள் காலத்தைக் கடந்து சிந்தித்தனர்; செயலாற்றினர். அதனாலேயே காலத்தை வென்ற கவிஞராயினர்'' என்கிறார்.

கவிஞர் முருகையனின் கவிதை வரிகளைப் போல ''வேண்டாத குப்பை விலக்கி மணி பொறுக்கி அப்பாலே செல்லும் அறி



வை'' விமர்சன இலக்கியத்தின் மூலம் வளர்க்க முயன்றார். தமிழரின் பண்டைய வீரயுகப் பாடல்களை கிரேக்கத்து வீரயுகப் பாடல்களுடன் ஒப்பு நோக்கி தமிழரின் தொன்மைச் சிறப்பை அவர் நிலைநிறுத்தினார்.

நவீன இலக்கியத்தில் அவரது பார்வை சமுதாய விடுதலையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இதனை அன்றைய அரசியற் சூழலை மனங் கொள்வதன் மூலமே தெளிவுற அறியலாம். சுதந்திரத்தின் பின்னும் காலனித்துவத்துக்கெதிரான தேசிய உணர்வலைகள் உலகெங்கும் பரவிய காலம். பெற்ற சுதந்திரத்தைப் பேணவும், புதிய சுதந்திரங்களுக்காகப் போரிடவும் துணிந்த காலம்.

இந்தியாவில் நடந்தது போல இலங்கையில் காலனித்துவத்துக்கு எதிராக பெருமளவு எழுச்சிகள், போராட்டங்கள் நடைபெறாத போதும், அன்றைய சர்வதேச நெருக்கடிகளும், இந்திய சுதந்திர இயக்கத்தின் தாக்கமும் கறுப்புத் துரைமாரின் கைகளில் சுதந்திரத்தை வழங்கியது. ஐந்து ஆண்டுகளின் பின் ஏகாதிபத்திய சார்பு அரசுக்கெதிராக 1953ம் ஆண்டு இடதுசாரிகளால் நடாத்தப்பட்ட ஹர்த்தாலும் பொது வேலை நிறுத்தமுமே இலங்கை வரலாற்றில் முதல் தேசம் தழுவிய மக்கள் நடவடிக்கையாக இருந்தது. அரசுத் தலைவர்கள் கொழும்புத் துறைமுகத்தில் கப்பலில் ஏறிப் பாதுகாப்புத் தேடும் அளவிற்கு அதன் எழுச்சி பலமடைந்தது. ஆட்சியைக் கைப்பற்றும் அளவிற்கு அதனை வளர்த்துச் செல்ல வலிமையற்ற தலைவர்களால் அந்த எழுச்சி அலை மெல்ல ஓய்ந்தது. அந்த எழுச்சியில் இருந்து படிப்பினைப் பெற்ற தேசிய முதலாளி வர்க்கம் அந்த ஹர்த்தாலின் உணர்வுகளை வலுவாகக் கொண்டு அரசியல் அரங்கில் நுழைந்தது. நகரத் தொழிலாளர்களை மட்டும் பெருமளவில் அணிதிரட்டியிருந்த இடதுசாரியினர் பெருந்தொகையான கிராமப்புற விவசாயிகளிடம் செல்வாக்கற்றிருந்தனர். இதனைச் சாதகமாக வைத்து இடதுசாரிகளும் தேசிய முதலாளித்துவ சக்திகளும் இணைந்த ஒரு அரசு உருவாக்கப்பட்டது. இதனால் தேசிய முதலாளித்துவத்தின் பின்னால் இழுபடவேண்டிய நிலை இடதுசாரிகளுக்கு ஏற்பட்டது. தேசிய முதலாளித்துவம் தொடர்ந்தும் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்காக தமிழ் மக்களைப் பாதித்த சிங்கள அரசகரும மொழிச் சட்டத்தையும் சாதாரண மக்களுக்கு சிறிதளவாவது பயனளிக்கக் கூடிய தேசியமயச் சட்டங்களையும் கொண்டுவந்தது. பாலர் வகுப்பு முதல் பல்கலைக் கழகம் வரை ஆங்கிலக் கல்விக்குப் பதிலாக தாய்மொழிக் கல்வியை முன்வைத்தது. இதுவரை ஆங்கிலம் கற்ற மேட்டுக்குடியி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர்க்கே வாய்ப்பாக இருந்த பல்கலைகழகக் கல்வி கிராமத்து தொழிலாளி விவசாயிகளின் பிள்ளைகளுக்கும் கிட்ட வாய்ப்பாக அமைந்தது.

இத்தகைய ஒரு காலகட்டத்தில் தனது விமர்சன ஆக்கங்களை வெளிக்கொணர்ந்த கைலாசபதி அவர்கள் இத்தேசிய விழிப்புணர்வை பயன்படுத்தி அதனை முற்போக்கு இலக்கியமாகக் கட்டி வளர்க்க முயன்றார். அவர் கருதிய தேசிய இலக்கியத்தின் தன்மை பற்றிக் குறிப்பிட வந்த அவர் ''தேசிய இலக்கியம், மண் வாசனை இலக்கியம், என்பவற்றின் பிரதித் தொடராக முற்போக்கு இலக்கியம் அமையாவிடினும் பல சந்தர்ப்பங்களில் சிறப்பாக நமது நாட்டுச் சூழலில் தேசிய இலக்கியம் முற்போக்கு இலக்கியப் பண்புகளைத் தழுவியதாகவே இருக்கிறது'' என்றார்.

மேலும் ''தேசிய இலக்கியம் எனும் பொருள் ஈழத்திலே குறிக்கும் பொருள் யாது? அது பல பொருள் குறிக்கும் ஒரு சொற்றொடர். அப் பல பொருளுள் விதந்துரைக்கத் தக்கன ஐந்து. விதேசிய எதிர்ப்பு, சுதேசிய விருப்பு, சமுதாய நோக்கு, ஜனநாயக நாட்டம், மனிதாபிமானம்'' என்று வகைப்படுத்தியும் கூறியுள்ளார்.

கைலாசபதி அவர்கள் மேலே குறிப்பிட்டுள்ள தேசியத்தின் பொருளிலிருந்து கண்மூடித் தனமாக அவர் தேசியத்தைப் பின் பற்றவில்லை என்பது புலப்படுகிறது. சமுதாய மாற்றத்தை அடிப்படையாகக் கொண்ட தேசியத்தையே அவர் அங்கும் காண விழைந்தார். பதவிக்கு வந்தபின் தேசிய முதலாளித்துவம் தனது நிலையை மாற்றிக் கொண்ட நிகழ்வை கைலாசபதி அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

''அந்நிய எதிர்ப்பு என்ற சாதகமான சூழலில் வேகமாக முன்னேற்றம் கண்ட தேசிய முதலாளிகள் காலப் போக்கில் தமது தேசியப் பண்பிலும் முதலாளித்துவப் பண்பே மேலோங்க விழைந்தனர். இதன் காரணமாக மக்கள் முன்னணி தொடங்கப் பெற்ற காலத்தில் அரைகுறையாகவேனும் உச்சரிக்கப் பெற்ற சோஷலிசக் கொள்கைகள் மெல்ல மெல்லக் கைவிடப்பட்டன. தொடக்கத்தில் காணப்பட்ட ஏகாதிபத்திய எதிர்ப்பும் மழுங்க விடப்பட்டது. தொழிலாளர் அணியிலிருந்த சில பிரிவுகள் தேசிய முதலாளித்துவ வர்க்கத்தை தவறாக விளங்கிக் கொண்டு தமது தனித்துவத்தைக் கைவிட்டதும் இப் போக்குகள் துரிதமடைய ஏதுவாக இருந்தது. குறுகிய காலத்தில் தேசிய முதலாளித்துவத்தின் அப்பட்டமான அதிகாரமே நிலவியது''



இப்படி தேசிய முதலாளித்துவ வர்க்கத்தைப் பற்றி தெளிவான கருத்தைக் கொண்டிருந்த அவர் அக்கால கட்டத்தை சாதகமாக்கி தனது இலக்கியப் பணியைச் சிறப்பாகச் செய்தார். எதற்கெடுத்தாலும் இந்தியாவையே நம்பியிருந்த நிலையை மாற்றி இந்த மண்ணின் அறிவியல், கலை, இலக்கிய வளர்ச்சிக்கும் செழுமைக்கும் வழி சமைத்தார். நாம் மறந்துவிட்ட ஈழத்து தமிழ் வளர்த்த அறிஞர் பரம்பரையை தேடி ஆய்ந்து வெளிக் கொணர்ந்தார்.

வட பகுதியில் நடந்த தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தின் போது கைலாசபதி அவர்கள் ''மனிதனை மனிதன் அடக்கி அடிமைப் படுத்தும் எல்லா விதமான முயற்சிகளும் பல்வேறு காலங்களில் போராட்டங்களினாலேயே மாற்றப்பட்டுள்ளன என்பது வரலாற்று உண்மை. மன மாற்றத்தால் அடிப்படை மாற்றம் ஏற்படாது மந்திரத்தால் மாங்காய் விழாதது போல. சாதிக் கொடுமையைப் பற்றியும், சாதி முறையைப் பற்றியும் எமது பழைய இலக்கியங்களிலே எடுத்துரைத்தவர்கள் ஆகக் கூடியபட்சம் மன மாற்றத்தையே எதிர்பார்த்தனர்'' என்று அப் போராட்டத்தை ஆதரித்து நின்றார்.

கைலாசபதி அவர்களுக்கு நாவலரின் சாதி ஆசாரக் கட்டுக் கோப்புகள் தெரியாத ஒன்றல்ல. காலத்தையும் சேவையையும் கருத்திற் கொண்டு காலனித்துவ கல்வி கலாச்சாரப் பரம்பலுக் கெதிராக நின்று தமிழ் வளர்த்த பெரியாராக அவரை இனங்கண்டார். சாதி ஆசாரத்தை மாத்திரம் வைத்து நாவலர் அவர்களை எடைபோடுவதானால் — அத்தகைய உரைகல்லில் உரைத்துப் பார்த்தால், தேசிய வீரர்களாக நாம் கருதும் சங்கிலியன, பண்டார வன்னியன் போன்றவர்களும் கூட தத்தமது பிரபுத்துவ நலன்களுக்காகவே நின்றனர் என்ற முடிவுக்கு நாம் வர நேரிடும்.

எனவே குறிப்பிட்ட காலத்தின் பிரதான எதிரிக்கு எதிராக தத்தமது நிலையில் நின்று காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப செயலாற்றிய ஒவ்வொருவரையும் கணிப்பிலெடுக்கும் கைலாசபதி அவர்களின் ஆய்வுமுறை சரியானதாகும். இதனை வைத்து கைலாசபதி அவர்கள் மாக்ஸிசத்தையும் எழுதுவார், சமய மறுமலர்ச்சி பற்றியும் எழுதுவார் என்று குறை கூறுவதுண்டு. ஆனால் அவர் அதற்கூடாகவும் மக்கள் நலன் சார்ந்த கருத்தையே வெளிக்கொணர்வார். அவர் வகித்த பதவி காரணமாகவும் அவரது இயல்பின் காரணமாகவும் சமூகத்தில் பல்வேறு மத அரசியல் கருத்துள்ளவர்களுடனும் பழகவேண்டிய நிலை ஏற்பட்டது. இதற்காக தாம் கொண்ட கருத்தையும் சமூக நோக்கையும் எந்த இடத்திலும் விட்டுக் கொடுக்காதவராகவே விளங்கினார். இதற்காகவே அவர் மாற்றுக் கருத்துடையவர்களால் அதிகம் விமர்சிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல விமர்சகர் என்ற அடிப்படையில் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவராக அவர் தன்னைக் கருதிக் கொள்ளவில்லை. ஆக்கபூர்வமான விமர்சனங்களை ஏற்கும் மனப்பாங்கு அவரிடம் இருந்தது. ஆனால் மக்கள் நலன்களுக்கு எதிரான கருத்துக்கள் கலை இலக்கிய வடிவங்களில் மறைந்து வந்தாலும் இனங்கண்டு உறுதியாக எதிர்க்கும் பண்பும் அவரிடம் இருந்தது.

தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை சார்பாக தாம் வாழ்ந்த காலத்தின் தேசிய, சர்வதேசிய, இந்திய நிலைகளைக் கருத்திற் கொண்டு அவர் சார்ந்திருந்த அரசியற் கட்சி முன் வைத்த சுயநிர்ணய அடிப்படையிலான பிரதேச சுயாட்சியையே அவர் கொள்கையாகக் கொண்டிருந்தார். இலங்கைத் தேசியத்தை எப்படி விமர்சன நோக்குடன் பார்த்தாரோ அதேபோன்று தமிழ் மக்களின் பிரச்சனைகளை முன்வைத்து தமது வர்க்க நலன்களை அன்று முதன்மைப் படுத்திச் செயற்பட்ட தமிழ்த் தலைவர்களையும் விமர்சனத்துடன் நோக்கினார்.

காலனித்துவத்துக் கெதிராக, ஒருவரது சுதந்திரத்தை ஒருவர் மதித்து தேசிய உணர்வுடன் போரிடாத தமிழ் சிங்கள ஆளும் வர்க்கம் காலனித்துவ நுகத்தடி கழன்றதும் தமது வர்க்க நலன்களுக்காக ஒன்றுபடுவதும் பிளவுபடுவது போல பாசாங்கு செய்வதாகவுமே இருந்துவந்தது. அதற்கு காலனித்துவம் கொடுத்துச் சென்ற பாராளுமன்ற ஆட்சிமுறை உதவிகரமாக அமைந்தது.

உலக ரீதியாக தேசிய இயக்கங்கள் அதன் ஆரம்ப காலங்களில் பல முற்போக்குக் கோஷங்களை முன்வைத்தே வளர்ச்சியடைந்தன. தனது எதிரிக்கு எதிராக தேசம் பரந்த ஒரு மக்கள் முன்னணியைக் கட்டி வளர்ப்பதற்காக ஒரு புதிய அமைப்புக்கான அறைகூவலை அவை விடுத்தன. ஆனால் தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சனையை முன்வைத்து ஐம்பதுக்கு ஐம்பது என்று சரிபாதி உரிமை கேட்ட தமிழ்க் காங்கிரஸ் தோட்டத் தொழிலாளர்களின் பிரஜா உரிமையைப் பறிப்பதில் சிங்கள ஆளும் வர்க்கத்துடன் ஒன்றிணைந்து நின்றது. அதுபோன்றே சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழும் சாதாரண மக்களுக்கு ஓரளவிற்காவது விமோசனத்தைத் தந்த பாடசாலை தேசிய மயம், தனியார் பஸ் தேசிய மயம், அந்நிய தேயிலைத் தோட்ட தேசிய மயம், குத்தகை விவசாயிகளுககு நன்மையளித்த நெற்காணி மசோதா போன்ற பல சட்டங்களை சிங்கள ஆளும் வர்க்கத்துடன் ஒன்றுபட்டு நின்று தமிழரசுக் கட்சி எதிர்த்தது. இவை தற்செயலாக நடந்தேறியவை அல்ல. தேயிலைத் தோட்டங்களுக்கும் கொழும்பை மையமாகக் கொண்ட மூல தனங்களுக்கும் உரிமையாளர்களாக இருந்த உடைமை வர்க்கத்தின் முடிவாகவே அது இருந்தது. அத்துடன் வடபகுதியில் நடந்த தீண்டாமைக்கு எதிரான போராட்டத்திலும் அன்றாடம் உழைத்து வாழும் தொழிலாளர்களின் தொழிற் சங்கப் போராட்டங்களிலும் அவர்களது நிலைப்பாடு எதிரானதும் பாராமுகமானது மாகவே இருந்தது.

பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்துக்கு அன்றைய இடதுசாரிகள் பலியானது போல பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்தைக் கடைப்பிடித்த தமிழ்த் தலைவர்களின் போக்கையே கைலாசபதி அவர்கள் விமர்சித்தார்.

எழுபதுகளின் பின்னர் தரப்படுத்தலுக்கு எதிராக மாணவர் இயக்கங்களின் பின் வளர்ந்த புதிய தலைமுறையினர் சமுதாய நோக்குடையவர்களாகவே வளர்ந்து வந்தனர். அதன் தொடராகவே இன்று இவ் விடுதலைப் போராட்டத்தில் சாதியம், பெண்ணடிமை, வர்க்க ஒடுக்குமுறை என்பவற்றிற்கும் எதிரான சமூக விடுதலையும் கருத்திற் கொள்ளப்படுகிறது. இப் போராட்ட தளத்திலிருந்து எழும் பல கவிதைகளிலும் சிறுகதைகளிலும் இவை வெளிப்படுகின்றன.

மக்கள் வீடுவாசல்களை இழந்து வேலைவாய்ப்புக்களை இழந்து இடம்பெயர்ந்து அல்லலுறும் அவலச் சூழலில் அரச சேவையில் உள்ள சிலர் பொறுப்புணர்வின்றி நடப்பதால் பாதிப்புறும் ஒரு தாயின் அங்கலாய்ப்பு ஒரு சிறுகதையில் இப்படி வெளிவருகிறது.

''இப்ப நடக்கிற சண்டை ஆருக்காக... எத்தனை உயிரிழப்பு பொருளிழப்பு இவையெல்லாம் என்னத்திற்காக... இந்தக் கஷ்ட காலத்திலும் வேலையை வேலையாய் செய்யமாட்டாதவங்கள் நாளைக்கு சுதந்திரம் கிடைச்ச பிறகும் தங்களுக்கு ஏத்தமாதிரி வசதியைச் செய்துகொண்டு ஏழையளிலை குதிரைவிடத்தான் போறான்கள். சீச்சீ...'' (''யாருக்காக?'', 30-10-92 ஈழநாதம்.)

இது போன்ற அடிநிலை மக்களின் உள்ளக் கொதிப்புகள் ஆங்காங்கு இலக்கிய வடிவங்களாக வெளிப்படுகின்றன. இந்த மண்ணையே நம்பி வாழும் அவர்களும் அவர்களது புதல்வர்களும் இப் போராட்டத்தை தாங்கும் தூண்களின் அங்கங்களாக விளங்குகின்றனர். பல்லாயிரக் கணக்கான உயிர்களை தியாகம் செய்து பெறும் மண்ணின் விடுதலை தமது வாழ்வின் விடுதலையோடும் இணைய வேண்டும் என்ற எண்ணம் இங்கு இயல்பாக எழுகிறது.

கைலாசபதி அவர்களும் அடித்தள மக்கள் தமது வாழ் நிலை உண்மைகளை தெரிந்து கொண்டு எழுச்சி கொள்வதற்கு கலை இலக்கியம் துணைபோக வேண்டு மென்றே விரும்பி உழைத்தார். எனவே இத்தகைய விடுதலைக்கு கைலாசபதியின் சமூகப்பார்வை மேலும் செழுமையூட்டும் என்பதில் ஐயமில்லை.

உசாத்துணை

1. தமிழ் நாவல் இலக்கியம், ஆகஸ்ட் 1981
2. திறனாய்வுப் பிரச்சனைகள், பெப் 1980
3. இலக்கியச் சிந்தனைகள், ஜனவரி 1983



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaperin Sri Lanka
செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

★ தரமான
நூல்கள்

- சுபமங்களா
- ஆளிர்
- சலனம்
- வெளி, முன்றில்
- குன்றின் குரல்

முதலிய சஞ்சிகைகள்

பெற்றுக்கொள்ள நாடுங்கள்!

# வசந்தம் புத்தக நிலையம்

405 அர்ச்சுனா வீதி யாழ்ப்பாணம்

இச்சஞ்சிகை தேசிய கலை இலக்கியப் பேரவைக்காக யாழ்ப்பாணம் 15/1, மின்சார நிலைய வீதியிலுள்ள க. தணிகாசலம் அவர்களால் யாழ்ப்பாணம் 407, ஸ்ரான்லி வீதியிலுள்ள யாழ்ப்பாண அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org